Registered as a news paper. இலவசப் பிரதி பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
ரா ம் கோ
(சி-653)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மாசி 26 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 முஹறம் 06 (10.03.2003) திங்கட்கிழமை இதழ் :158

# யாழ். புத்திஜீவிகளுடன் உறவை வளர்க்க
# கலாசார நிலையம் நிறுவுகிறது அமெரிக்கா

## நவீன வசதிகளுடன் நகரில் உருவாக்கத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

**அமெரிக்க கலாசார நிலையம் ஒன்று மிகவிரைவில் யாழ்.நகரில் அமைக் கப்படவுள்ளது. யாழ்ப்பாணத்தில் உள்ள புத்திஜீவிகளுடன் உறவை வளர்த்துக்கொள்வதற்காக - அமெரிக்க அரசு மேற்படி கலாசார நிலையத்தை யாழ்ப்பாணத்தில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.**

யாழ். நகரில் மிகவும் நவீன வசதிகளுடன் அமையவிருக்கும் இக் கலாசார நிலையத்தை, மிக விரைவாக அமைப்பதற்கு அமெரிக்க அரசு துரித நடவடிக்கை எடுத்துவருகிறது.

கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் ஊடாக, இதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை அமெரிக்க அரசு ஏற்கனவே ஆரம்பித்துள்ளது.

இக்கலாசார நிலையத்தில், சர்வதேச தரத்திலான நூல் நிலையம் ஒன்றும், தகவல் மையம் ஒன்றும் முதற்கட்டமாக அமைக்கப்படவிருக் கின்றன. இவற்றைவிட கருத்தரங்கு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை – இந்திய பக்தர்கள் கச்சதீவுக்கு வந்து சேர்ந்தனர்
### நேற்று சிறப்பாக நடந்தது உற்சவம்

(கச்சதீவிலிருந்து - பிரசாந்தன், கண்ணன்)

கச்சதீவு அந்தோனியார் ஆலய உற்சவம் மிகவும் பக்திபூர்வமாக நேற்று நடைபெற்றது.

இந்திய, இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பக்தர்கள் அந்தோனியார் ஆலய உற்சவத்தில் கலந்துகொள்வதற்காக கச்சதீவில் வந்து தரையிறங்கினர். மேற்படி உற்சவத்தின்போது இலங்கை, இந்திய அருட்தந்தையர்கள் இணைந்து கூட்டுத் திருப்பலியை ஒப்புக்கொடுத் தனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் தமிழர் தாக்கப்படும் ஆபத்து
## தடுக்குமாறு ரணிலுக்கு மகேஸ்வரன் கடிதம்

இன்று கொழும்பில் இடம்பெறவுள்ள - சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், ஜே.வி.பியும் இணைந்து நடத்தவுள்ள மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியை அடுத்து, தமிழர்களும், தமிழர்களின் வியாபார நிறுவனங்களும் தாக்குதலுக்குள்ளாக்கப்படும் அபாயம் இருப்பதாக, இந்து விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

பத்திரிகையில் இது சம்பந்தமாக ஜனாதிபதி வெளியிட்டுள்ள அறிக்கையினைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளதாகவும், இதுபற்றி உள்துறை அமைச்சு மூலம் விசாரணை மேற்கொள்ளுமாறும் அமைச்சர் மகேஸ்வரன் பிரதமருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தரைப்படை, கடற்படை, விமானப் படை மற்றும் பொலிஸாருக்கு பணிப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கச்சதீவு சென்ற இளைஞன் கடலில் மூழ்கி உயிரிழப்பு!

கச்சதீவு அந்தோனியார்ஆலயத்துக்குச் சென்ற இளைஞன் ஒருவன் கடலில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவமொன்று நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது.

இச் சம்பவத்தில் நெடுந்தீவு 14 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நா.ரவிச்சந்திரன் (வயது 36) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்றுமுன்தினம் மாலை 4 மணிக்கு நெடுந்தீவிலிருந்து படகில் புறப்பட்ட இவர், இரவு 8 மணிக்கு

(10 ஆம் பக்கம் பார்க்க)

### கொழும்பிலும் இரசாயனத் தாக்குதல் அச்சம்
## அமெரிக்க தூதரக ஊழியர்களுக்கு முகமூடிக் கவசங்கள் கொள்வனவு

(கொழும்பு)

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் மீது இரசாயன, உயிரியல் ஆயுதத் தாக்குதல்கள் இடம்பெறலாம் என்ற அச்சம் ஏற்பட்டிருப்பதால் - இத்தகைய தாக்குதல்களில் இருந்து பாதுகாப்புத் தேடுவதற்காக முகமூடிக் கவசங்கள் வாங்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

அமெரிக்கத் தூதரகத்தின் பாதுகாப்பு அதிகாரியான புறூஸ் ஏ. லோகோவ் இந்தத் தகவலை உறுதிப் படுத்தியுள்ளார்.

உலகிலுள்ள அமெரிக்கத் தூதரகங்கள் அனைத்துக்கும் வழங்கப் பட்டுள்ள பாதுகாப்பு முன்னேற்பாடுகளைப் போலவே, கொழும்பிலுள்ள தூதரகத்திலும் பாதுகாப்புகள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்றும்,

இரசாயன, உயிரியல் ஆயுதத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அமைதி முயற்சிகள் பற்றி அமைச்சர் பீரிஸ் வவுனியாவில் படையினருக்கு விளக்கம்!

(கொழும்பு)

இந்த நாட்டில் இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு உகந்ததல்ல, அரசியல் தீர்வே இறுதியானதும் சாத்தியமானதுமாகும்.

- இவ்வாறு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாகப் படையினருக்கு விளக்கமளிக்கும் கலந்துரையாடல், வன்னி இராணுவக் கட்டளைத் தலைமையகத்தில் நேற்று நடைபெற்றபோதே அமைச்சர் பீரிஸ் இந்தக் கருத்துக்களை முன்வைத்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

இதனால்தான் அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுவருகின்றன. இதையிட்டு ஆயுதப்படைகள் எவ்வித சந்தேகமும் கொள்ளத்தேவையில்லை.

இனப்பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வு ஏற்படவேண்டும் என்பதை அரசாங்கம் விரும்புகிறது. அதற்குப்

(10 ஆம் பக்கம் பார்க்க)



வவுனியா வந்த அமைச்சர் பீரிஸை வன்னிக்கான இராணுவக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால வரவேற்கிறார்.

## அக்குரஸ்ஸ பிரதேசசபை தேர்தல்; பொ.ஐ.மு., ஜே.வி.பிக்கு வெற்றி

(கொழும்பு)

அக்குரஸ்ஸ பிரதேச சபைக்கு நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தலில், பொதுஜன ஐக்கிய முன்னணியும் - ஜே.விபியும் அதிகளவிலான ஆசனங்களைப் பெற்றுள்ளன.

21 ஆசனங்களைக் கொண்ட அக்குரஸ்ஸ பிரதேசசபைக்கு, பொது ஜன ஐக்கிய முன்னணி சார்பில் பத்துப் பேரும், ஜே.வி.பி. சார்பில் ஆறு பேரும், சிங்ஹல மகா சம்பத பூமி புத்திர கட்சி சார்பில் ஐவரும் தெரிவாகியுள்ளனர்.

மொத்த வாக்காளர்களில் 65 சத வீதமானோர் வாக்களித்ததாகத் தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது. இதில் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு 15 ஆயிரத்து 84 வாக்குகளும், ஜே.வி.பிக்கு 11 ஆயிரத்து 538 வாக்குகளும், சிங்ஹல மகா சம்பத பூமிபுத்திர கட்சிக்கு 10 ஆயி

(10 ஆம் பக்கம் பார்க்க)

### செயலகம் முன்பாக மறியல்

களுத்துறைச் சிறையில் கடந்த ஒருவார காலமாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் அரசியற்கைதிகளுக்கு ஆதரவாக, யாழ். செயலகம் முன்பாக இன்று அடையாள மறியற்போராட்டம் நடத்தப்படவுள்ளது. காலை 10.30 மணிமுதல் 11.30 மணிவரை இந்த மறியற் போராட்டம் நடத்தப்படும்.

### விண்ணாணம் விநாசியர்



அப்ப, யாழ்ப்பாணத்துக்கும் முகமூடியோடவே வருகினம்...!

## க.பொ.த. உயர்தரப் பரீட்சை ஏப்ரல் 21 இல் ஆரம்பமாகும்

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கான புதிய கால அட்டவணையை பரீட்சைத் திணைக்களம் வெளியிட்டிருக்கின்றது. முன்னதாக உயர்தரப் பரீட்சைகள் ஏப்ரல் முதல் வாரத்தில் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டிருந்தது.

சித்திரைப் புதுவருடம், வெசாக் பண்டிகை என்பவற்றைக் கருத்திற் கொண்டு உயர்தரப் பரீட்சைகளுக்கான கால அட்டவணை மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றது.

புதிய கால அட்டவணையின்படி, உயர்தரப் பரீட்சைகள் இரண்டு கட்டங்களாக நடத்தப்படவுள்ளன, ஏப்ரல் 21 ஆம் திகதி முதல் மே 3 ஆம் திகதிவரை முதலாம் கட்டமாகவும், மே 19 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி இரண்டாம் கட்டமாகவும் பரீட்சை நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சையில் - 2 லட்சத்து 12 ஆயிரத்து 146 பாடசாலை பரீட்சார்த்திகளும் 35 ஆயிரத்து 500 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தோற்றவுள்ளனர்.

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
021-2223916, 0777-517019, 01-505632, 074-612656, 01-300128.
(சி-626)

# ஐ.நா. பாதுகாப்புச் சபையின் அனுமதியின்றியே ஈராக்கைத் தாக்கத் திட்டமிடுகின்றது அமெரிக்கா!

## ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் சாடுகிறார்

ஈராக் அரசாங்கம் பேரழிவு தரும் ஆயுதங்களை அழிப்பதில் கூடிய ஒத்துழைப்பைத் தரவேண்டும் என, அமெரிக்க ஜனாதிபதி புஷ் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஈராக் மீது இராணுவ நடவடிக்கை எடுக்கும் முயற்சி, ஐ.நா. பாதுகாப்புச் சபையில் தோல்வியில் முடிவடைந்ததனைத் தொடர்ந்து, அமெரிக்க ஜனாதிபதியின் தற்போதைய அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இதேவேளை, அமெரிக்காவும் அதன் நெருங்கிய நேச நாடாகிய பிரித்தானியாவும், மார்ச் 17 ஆம் திகதிக்கு முன்னர், ஈராக் அழிவுதரும் ஆயுதங்களை முற்றாக அழித்துவிட வேண்டும் எனக் கோரியுள்ளன.

ஆனால், எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆயுதப் பரிசோதகர்கள், பாதுகாப்புச் சபையிடம் தமது அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளனர். ஐ.நாவின் தலைமை ஆயுதப் பரிசோதகர், ஈராக் தம்முடன் பூரணமாக ஒத்துழைத்துள்ளதாகக் கருத்து வெளியிட்டுள்ளார்.

ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் இகோர் இனிவனோ - அமெரிக்கா ஐ.நா. சபையின் சட்டங்களை மீறும் வகையில், ஐ.நா. பாதுகாப்புச் சபையின் அனுமதியைப் பெறாமலேயே ஈராக் மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளதாக எச்சரித்துள்ளார்.

ஆனால், அமெரிக்க ஜனாதிபதி புஷ், ஐ.நாவின் ஆயுதப் பரிசோதகர்களுக்கு மேலும் கால அவகாசமும் மேலதிகமான ஆளணியும் தேவைப்படுவதாகத் தனது வாராந்த வானொலி உரையில் குறிப்பிட்டுள்ளார்.



காஸா நகரில் நடந்த பேரணியில் ஹமாஸ் ராணுவ உடையில் பலஸ்தீனச் சிறுமி ஒருத்தி.

# அல் கெய்டா சந்தேக நபர்கள் ஸ்பெயினில் கைதாகினர்!

அல் கெய்டா அமைப்பினருடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின்பேரில், ஐந்து பேர் ஸ்பெயினில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் நால்வர், ஸ்பெயின் நாட்டின் தென்மேற்கு நகரான வலன்சியாவில் கடந்த வருடம் நடைபெற்ற ட்ரக் வண்டிக் குண்டுத் தாக்குதலுடன் தொடர்புபட்டவர்கள் என்ற புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையிலேயே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேலும், கைதுசெய்யப்பட்ட நபர்கள் அல் கெய்டா அமைப்பினருடன் நிதி ரீதியான தொடர்புகளைப் பேணியதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் நடைபெற்ற ட்ரக் குண்டுவெடிப்பினால், இருபத்தியொரு ஜேர்மனிய உல்லாசப் பயணிகள் ஸ்பெயினில் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானில் அரசமைப்பை திருத்த முயற்சி நாடாளுமன்றில் எதிர்க்கட்சிகள் போர்க்கொடி




பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் அரசியற்திட்ட சீர்திருத்த சட்டங்களை ஆளுங்கட்சி கொண்டுவந்ததால், நாடாளுமன்றத்தில் நெருக்கடி நிலவுகின்றது.

மேற்படி முயற்சியினால், கடந்த வெள்ளி முதல் பாகிஸ்தானிய நாடாளுமன்றக் கூட்டத்தொடரை பகிஷ்கரித்து வரும் எதிர்க்கட்சிகள், அங்கு ஜனநாயகத்திற்குப் பெரும் அச்சுறுத்தல் நிலவிவருவதாகக் குற்றஞ் சாட்டியுள்ளன.

இதேவேளை, பாகிஸ்தானிய பிரதம மந்திரி மீர் ஸுபாருல்லா கான் எதிர்க்கட்சிகளைப் பேச்சுக்கு வரும்படி அழைத்துள்ளார். தற்பொழுது ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு சகல கட்சிகளும் கூடிப்பேசித் தீர்வுகாணலாம் என அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி பர்வேஷ் முஷாரவ், நாடாளுமன்றத்திடம் கேட்காமல் அரசமைப்புத் திருத்தங்களை மேற்கொள்வதாகவே எதிர்க்கட்சிகள் போர்க்கொடி எழுப்பியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க வேவு விமானத்தை வட கொரியா மறிக்க முயற்சி



வடகொரியா பரிசோதித்த ஏவுகணை

அமெரிக்க வேவு விமானத்தினை சர்வதேச வான் பரப்பில் வைத்து வட கொரிய ஜெட் விமானங்கள் இடைமறிக்க முயற்சித்துள்ளன.

மேற்படி சம்பவம் தொடர்பாக அமெரிக்க சிரேஷ்ட இராணுவப் பேச்சாளர் தகவல் வெளியிடுகையில் - வடகொரிய விமானங்கள் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட குறியீடுகளைப் பயன்படுத்தி, அமெரிக்க வேவு விமானத்தினை இடைமறிக்க முயன்றதாகத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க விமானம், சர்வதேச வான்பரப்பிலேயே - வடகொரியக் கரையிலிருந்து இருநூற்றிநாற்பது கிலோமீற்றர் தூரத்திலே பறந்ததாகத் தெரியவருகிறது.

இதுபற்றி வடகொரியா கருத்து வெளியிடுகையில் - தாம், கப்பலிலிருந்து ஏவப்படும் ஏவுகணைகளை பரிசோதித்ததாகவும், மேற்படி ஏவுகணைப் பரிசோதனைகள் கொரியக் குடாவிற்கும் ஜப்பானிற்கும் இடைப்பட்ட சர்வதேசக் கடற்பரப்பில் நிகழ்ந்ததாலேயே, மேற்படி கடற்பரப்புக்கு மேலான வான் பரப்பில் விமானங்கள் செல்வதனை தாம் தடுத்ததாகவும் தெரிவித்துள்ளது.

# ஆப்கானில் தாக்குதல் நடத்த திட்டமிட்டனராம்; 7 பேர் அமெரிக்கப் படையினரால் கைதாகினர்!



ஏழு சந்தேக நபர்களை அமெரிக்க கூட்டு இராணுவம் ஆப்கானிஸ்தானில் கைதுசெய்துள்ளது. மேற்படி ஏழு சந்தேக நபர்களும் ஆப்கானிஸ்தானில் கடமையாற்றும் அமெரிக்கப் படைகள் மீது தாக்குதல்களை நடத்தத் திட்டமிட்டிருந்ததாக அமெரிக்க இராணுவப் பேச்சாளர் ரோசர் கிங் தெரிவித்துள்ளார்.

மேலும், இராணுவப் பேச்சாளர் கருத்துத் தெரிவிக்கையில், தமக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையிலேயே தாம் மேற்படி சந்தேக நபர்களைக் கைது செய்ததாகத் தெரிவித்துள்ளார்.

ஆனால், கைது செய்யப்பட்டவர்கள் அல் கெய்டா அமைப்பினரோ அல்லது முன்னாள் தலிபான் அரசாங்கத்தின் உறுப்பினர்களோ என்று தெளிவாகத் தெரிவிக்காதபோதும், இவர்கள் கட்டடங்களுக்குள் குண்டுகளை வெடிக்கவைக்கத் திட்டமிட்டிருந்ததாக அமெரிக்க இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

உலகவலம்

## இன்றைய நாள் இனிய நாள்

### 10-03-2003 - திங்கட்கிழமை

| | |
|---|---|
| **மேடம்** | :- காரியசித்தி, பணவரவு, பெண்களால் நன்மை, வாக்கு வசீகரம், பெரியோர் மதிப்பு. |
| **இடபம்** | :- கொடுக்கல் வாங்கல் பிணக்கு, களஸ்திர சுகம், பெரியோர் மதிப்பு, இல்லச்சிறப்பு. |
| **மிதுனம்** | :- சத்துரு வெற்றி, அதிகார சித்தி, வீண்பயம், மனக் கவலை, குடும்பசுகம். |
| **கர்க்கடகம்** | :- விஷபயம், தேகசுகம் பாதிக்கப்படும், பணக் குறைவு, ஊக்கமிகுதி. |
| **சிங்கம்** | :- தொழில் விருத்தி, நற்கீர்த்தி, சிநேக இலாபம், வாகன சுகம், பொருள் வரவு. |
| **கன்னி** | :- வியாதி, பயனற்ற பிரயாசம், நன்மதிப்பு, நற்குண விருத்தி, குடும்பசுகம். |

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

| | |
|---|---|
| **துலாம்** | :- பொறாமை, ஏமாற்றம், தாரசுகத் தடை, பிள்ளைகளால் கவலை. |
| **விருச்சிகம்** | :- தருமகாரியம், சிநேக இலாபம், கோபமிகுதி, பொருள்வரவு, இல்லச்சிறப்பு. |
| **தனு** | :- மனப்பயம், காலில் காயம், தனித்தநிலை, வாகன இலாபம், களஸ்திர மகிழ்ச்சி. |
| **மகரம்** | :- பூமியால் நன்மை, நன்மதிப்பு, களஸ்திர புத்திர மகிழ்ச்சி, புதிய ஸ்தானம். |
| **கும்பம்** | :- தனலாபம், சரீர சுகம், இல்லச்சிறப்பு, காரியசித்தி. |
| **மீனம்** | :- பிரயாண கஷ்டம், குடும்ப சுகம், காரியவெற்றி, வாகன இலாபம். |

ராஜா
யாழ்ப்பாணம்.
11 வரை
அஜித், சிம்ரன், கவுண்டமணி, செந்தில் நடித்த
அவள் வருவாளா
நேரம்:- 10.30, 2.30, 6.30 மட்டும்
U. 571
இரவு 9.30. மட்டும் 10-13 வரை.
(சி-628)

நிறஞ்சனாஸ் சங்கானை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
விஜயகாந், மீனா நடித்த
தேவன்
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 மணி காட்சி
U 571
அதிரடித் தாக்குதல் நிறைந்த படம்.
(சி-627)



இந்தியாவின் கேரள மாநிலத்தில் சுவாரசியமாக நடைபெற்ற சேற்றுப் பகுதிக்கூடாக நடத்தப்படும் மாட்டுவண்டிப் போட்டி.

## மௌனப் பேரணியில் தொண்டர் ஆசிரியர்கள் பங்கேற்க அழைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஏற்பாடு செய்துள்ள மௌனப் பேரணியில் அனைத்துத் தொண்டர் ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு, தொண்டர் ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு முன்னர் ஏற்றுக்கொண்டபடி வடக்கு-கிழக்கில் சேவையாற்றும் தொண்டர் ஆசிரியர்களில் 1000 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் முகமாக, நாளை இடம்பெறும் மௌனப் பேரணியில் பாடசாலைகளைப் பகிஷ்கரித்து,

அன்று காலை 10 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகும் பேரணியில் பங்குபற்றும்படி சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வன்னியிலுள்ள சுதந்திரம், பாதுகாப்பு யாழ்ப்பாணத்தில் பெண்களுக்கு இல்லை!

## மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி கருத்து



(யாழ்ப்பாணம்)

ஆயுதந் தாங்கிய ஈழப் போராட்டத்தில் ஆண்களுக்கு எந்தவகையிலும் சளைக்காதவர்களாகப் பெண்களும் போராடி வருகின்றார்கள்.

- இவ்வாறு நேற்றுமுன்தினம் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்ற மகளிர் தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழீழ மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி தெரிவித்தார்.

மேலும் அவர் தனது உரையின்போது,

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியிலுள்ள பெண்கள் அச்சமின்றி எந்தநேரங்களிலும் உலாவமுடிகின்றது எனவும், இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் உட்பட்டிருக்கும் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தளவில் பெண்கள் தனியே நடமாடமுடியாதவர்களாகவும், தொடர்ந்தும் அச்சத்துடன் அடக்கப்பட்டே வாழும் நிலையிலும் இருக்கின்றார்கள் எனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தமிழீழக் கல்விமேம்பாட்டுப் பேரவைத் தலைவர் பேராசிரியர் சண்முகதாஸ் மற்றும் யாழ். மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் ஆனந்தி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(க)

## கவிஞர் பஞ்சாட்சரம் அனுபவப் பகிர்வு

கவிஞர் ச.வே.பஞ்சாட்சரம் வழங்கும் 'மனவெளி' கலை இலக்கிய அனுபவப் பகிர்வு - யாழ். பருத்தித்துறை வீதியிலுள்ள எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை 4 மணிக்குச் செம்பியன் செல்வன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

## தம்புருவளை விநாயகர் ஆலயத்தில் திருப்பணி

(வடமராட்சி கிழக்கு)

அருள்மிகு தும்பளை - தம்புருவளை ஸ்ரீசித்திவிநாயகர் தேவஸ்தான திருப்பணி வேலைகள் சுமார் 8 லட்சம் ரூபா செலவில் நடைபெற்று வருகின்றன.

மடைப்பள்ளி, வாகனசாலை, களஞ்சிய அறை என்பன சுமார் 3 லட்சம் ரூபாவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. தற்பொழுது 5 லட்சம் ரூபாவில் எல்லைச்சுவர் அமைக்கப்பட்டு வருகிறது.

# எல்லைக் கிராமமான மயிலந்தனையில் தமிழர் மீள்குடியேற இராணுவம் மறுப்பு!

## எப்படியும் வழிசமைப்போம் என்கிறது யு.என்.எச்.சி.ஆர்.

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - மயிலந்தனையிலிருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு மின்னேரியாவிலுள்ள 23 ஆவது டிவிசன் தளபதி பிரிகேடியர் எ.ஆர்.பாலசூரிய அனுமதி வழங்க மறுப்புத் தெரிவித்துள்ளார்.

மயிலந்தனையில் 1992 ஆம் ஆண்டு இடம்பெற்ற படுகொலைகளையடுத்து, அங்கிருந்து தமிழ் மக்கள் இடம்பெயர்ந்து வாழைச்சேனை அகதிமுகாமில் தங்கியுள்ளனர். இவர்களை மீளக்குடியமர்த்த 'ஷோ-ஆ' என்ற சர்வதேசத் தொண்டர் அமைப்பு ஒன்று ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

இந்த அமைப்பு அதிகாரிகள் மயிலந்தனை மற்றும் அதனையடுத்துள்ள சலப்பாச்சேனை ஆகிய கிராமங்களுக்குச் சென்று, அந்தப் பகுதி மக்களுடன் இணைந்து மீளக் குடியமர்வுக்கான துப்பரவுப் பணிகளை ஆரம்பித்தனர்.

இந்தத் தகவலை அறிந்த 23 ஆவது டிவிசன் கட்டளை அதிகாரி இப்பகுதியில் மீளக்குடியமர அனுமதி மறுப்புத் தெரிவித்துள்ளார்.

புலிகளின் கட்டுப்பாட்டிலும், படையினரின் கட்டுப்பாட்டிலும் இப்பகுதி இருப்பதால், மீளக்குடியமர அனுமதிக்க முடியாதென அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த யு.என்.எச்.சி.ஆர். அதிகாரிகள் - படையினருடன் தொடர்ந்து பேசி, மீளக்குடியமர்வுக்கான அனுமதியைப்பெற நடவடிக்கை எடுக்கப்படும எனத் தெரிவித்துள்ளனர்.

## ஹாட்லியில் விரைவில் கலையரங்கு

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்குக் கலையரங்கு அமைப்பதற்கென ஐந்து பரப்புக் காணியும், இப்பொழுது மூன்று பரப்புக் காணியும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இக்கலையரங்கினை நிர்மாணிப்பதற்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிதியுதவியளிப்பதாக, இக்கல்லூரிக்கு வருகை தந்தபோது உறுதியளித்திருந்தார் எனவும், இக்கலையரங்கு வேலை மிகவிரைவில் ஆரம்பிக்கப்படுமெனவும் பழைய மாணவசங்கத் தலைவரும், யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட பீடாதிபதியுமாகிய எம்.நடராஜசுந்தரம் தெரிவித்தார். (116)

# எமது தற்போதைய போராட்டம் பகிஷ்கரிப்பு நடவடிக்கையாகிறது

## தொண்டராசிரியர்கள் அறிவிப்பு

(பளை)

தற்பொழுது நடைபெற்றுவரும் தொண்டர் ஆசிரியர் போராட்டம், தொடர்ந்து பகிஷ்கரிப்புப் போராட்டமாக மாற்றம் செய்யப்பட்டிருப்பதாகத் தொண்டர் ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்போராட்டம் தொடர்ந்து 11 ஆம திகதிக்குப் பின்னரும் நீடிக்கப்படுமெனவும், தகுந்த பதில் வரும் வரை இது தொடரும் எனவும் அவர்கள் தெரிவித்தனர். (115)

## தொண்டமான் — செல்லச்சாமி கடும் முறுகல்

# இ.தொ.கா. பிரதித் தலைவராக லண்டனுக்கான தூதுவர் மகன்!

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிற்குப் புதிய துணைத் தலைவராகச் சட்டத்தரணி ஃபைசர் முஸ்தபா நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து, கட்சியின் தலைவர் ஆறுமுகம் தொண்டமானுக்கும் - பொதுச் செயலாளர் எம்.எஸ்.செல்லச்சாமிக்குமிடையே முறுகல்நிலை ஏற்பட்டுள்ளது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு நெருக்கமானவரும், லண்டனிலுள்ள இலங்கைத் தூதுவருமான ஃபாயிஸ் முஸ்தபாவின் மகனான ஃபைசர் திடீரென இப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்தவாரம் கொழும்பில் நடைபெற்ற தொழிலாளர் காங்கிரஸின் மத்தியக்குழுக் கூட்டத்தில் வைத்து - அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் இந்த நியமனத்தை அறிவித்ததைத் தொடர்ந்து, எம்.எஸ்.செல்லச்சாமிக்கும் - அவருக்கும் இந்த மோதல் ஏற்பட்டது.

இந்த நியமனம் வேண்டத்தகாத விளைவுகளை ஏற்படுத்தும் எனச் செல்லச்சாமி வாதிட்டார்.

# பண்டிகை முற்பணத்தொகை அதிகரிக்க அரசு தீர்மானம்


அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் பண்டிகைக்கால முற்பணத்தை அதிகரிப்பதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

நிதி அமைச்சர் கே.என்.சொக்ஸி தகவல் தருகையில், இந்தவிடயம் தொடர்பான பிரேரணை ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

புதுவருடத்திற்கான பண்டிகைக் கால முற்பணமாக இதுவரை 2000 ரூபா வழங்கப்பட்டு வந்தது. வாழ்க்கைச்செலவு அதிகரிப்பைக் கருத்திற்கொண்டு இந்தத்தொகையை அதிகரிக்கும்படி அரசாங்க ஊழியர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பண்டிகைக்கால முற்பணமாக 3000 ரூபாவை வழங்குவதற்கு அனுமதிகோரும் அமைச்சரவை விஞ்ஞாபனம் ஏற்கனவே அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பான தீர்மானம் விரைவில் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.



பருத்தித்துறை கொட்டடி சித்திவிநாயகர் ஆலயத்தில் சிவராத்திரி தினவிழாவன்று சித்திவிநாயகப் பெருமான் தேர் ஏறுவதற்காக அடியார்களால் சுமந்துவரப்படும் காட்சியைப் படத்தில் காணலாம்.

# நெடுந்தீவுக் கடற்படை முகாம் அகற்றும் மிலிந்தவின் வாக்குறுதி எங்கே போனது?

## பாதுகாப்பு அமைச்சருக்கு மாவை சேனாதிராஜா கடிதம்

நெடுந்தீவில் அமைக்கப்பட்டுள்ள கடற்படை முகாமை அகற்ற நடவடிக்கை எடுக்கும்படி பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவை யாழ். மாவட்ட எம்.பி. மாவை சேனாதிராஜா கடிதம் மூலம் கேட்டுள்ளார்.

அண்மையில் நெடுந்தீவு வந்திருந்த பொருளாதார மறுசீரமைப்பு விஞ்ஞான தொழில்நுட்பத்துறை அமைச்சர் மிலிந்த மொறகொட இந்த முகாமை அகற்ற ஆவனசெய்வதாக உறுதியளித்திருந்தார். எனினும், இந்த வாக்குறுதி இன்னமும் நிறைவேற்றப்படவில்லையென மாவை சேனாதிராஜா அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

நெடுந்தீவில் ஈ.பி.டி.பி. மீள நுழைந்தசமயம், பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் செய்தவேளை, அங்கு கடற்படை அனுப்பப்பட்டு ஈ.பி.டி.பிக்குப் பாதுகாப்பளிப்பதற்காக அங்கு கடற்படை முகாம் அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## அகில இலங்கை பாடசாலை கிரிக்கெட் சுற்றுப்போட்டி

# யாழ். பாடசாலை அணிகள் பதிவுக்கு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை அழைப்பு!

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைப் பாடசாலைக் கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான இவ்வருடத்துக்கான சுற்றுப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

பாடசாலைகளில் உள்ள 16 வயதிற்குட்பட்ட மாணவர்கள் (1.1.1987 இற்குப் பின் பிறந்தவர்கள்) பங்குபற்றவுள்ள இப்போட்டிக்கான பதிவுகள் - எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு வவுனியா மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் - வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார், அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களிலுள்ள கிரிக்கெட் அணிகளைக் கொண்டிருந்த பாடசாலைகளில் விளையாட்டுப் பொறுப்பாசிரியர்கள், ஓட்டப் பதியுநர்கள் மற்றும் பயிற்றுநர்களையும் கலந்துகொள்ளும்படி இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் பணிப்பாளர் பந்துல வர்ணபுர அறிவித்துள்ளார்.

போட்டிகளுக்கான மத்தியஸ்தர் செலவுகள், பந்துகள், கிரிக்கெட் உபகரணங்கள்' என்பன பதிவு செய்யும் பாடசாலைகளுக்கு மட்டுமே வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(ச)

## உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் வரும்

# தாண்டிக்குளப் பகுதியில் மீள்குடியேற அனுமதி!


வவுனியாவில் உயர் பாதுகாப்பு வலயமான தாண்டிக்குளம் தொடக்கம் ஓமந்தைவரையில் இனங்காணப்பட்ட பகுதிகளில் - திங்கள் முதல் மக்கள் மீள்குடியேற்றம் செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.


வவுனியா அரசாங்க அதிபர் கே.கணேஷ் தலைமையில் நேற்றுமுன்தினம் அரச செயலகத்தில் நடைபெற்ற மீள்குடியேற்றம் தொடர்பான கூட்டத்தில் இம்முடிவு எட்டப்பட்டுள்ளது.

வன்னிப் பிராந்தியப் படைத்தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால, விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் மற்றும் பிரதேச இராணுவ அதிகாரிகளும், பிரதேச செயலாளர்களும் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

உயர்பாதுகாப்பு வலயத்தில் 38 கிராமங்களில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டிருந்தபோதிலும், பல இடங்களில் கண்ணிவெடிகள் அகற்றப்படவேண்டிய இடங்களும் உள்ளதென அரசாங்க அதிபர் தெரிவித்தார். இந்தக் கிராமங்களில், 5 கிராமங்களில் மாத்திரம் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# சின்ன மீனைப் போட்டு


பயணிகள் விபரம்



மக்கள் ஜனநாயகப் பேரவை
PEOPLES DEMOCRATIC ALLIANCE

பகுதி 3

வழக்கம்போல அன்றைக்கும் தனது கைத்துப்பாக்கியை எடுத்து மிகவும் லாவகமாக இடுப்பில் செருகிக்கொண்டான். வீதியில் இறங்கி நடந்தபோது, அவனது கைத்தொலைபேசி அலறியது. நிதானமாக நின்று குரல் கொடுத்தான். மறுமுனையிலிருந்து வந்த குரல் அவனிடம் சற்று பதற்றத்தை ஏற்படுத்தி விட்டு ஓய்ந்தது. அவனது கால்கள் மீண்டும் அலுவலகத்தை நோக்கி நடந்தன. தனது அலுவலகத்துக்குள் சென்றதும் சற்றுப் பரபரப்பாகவே காணப்பட்டான். தனது அலுவலகத்துக்குள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த கோவைகளை வெறிபிடித்தவன்போல புரட்டிக்கொண்டிருந்தான்.

அந்தக் கோவைகளுக்கிடையில் தென்பட்ட கடிதத் தலைப்பு ஒன்று அவனது பதற்றத்தைத் தணித்தது. அது மக்கள் ஜனநாயகப் பேரவை என்ற அரசியல் கட்சியின் கடிதத் தலைப்பு. இக்கட்சியினர், இம்மோசடிக் கும்பலின் மிக நெருங்கிய நண்பர்கள். இவ்விரு தரப்புக்களும் ஒருவருக்கு ஒருவர் பரஸ்பரம் உதவி செய்து கொள்வது வழக்கம். இந்தக் கட்டத்திலும் மக்கள் ஜனநாயகப் பேரவையின் உதவி, இம்மோசடிக் கும்பலின் தலைவனுக்குத் தேவைப்பட்டது.

அந்த மோசடிக்கும்பலின் உறுப்பினர்கள் அனைவரும் மக்கள் ஜனநாயகப் பேரவை என்ற அந்த அரசியல் கட்சியில் புதிதாக இணைந்து கொண்ட உறுப்பினர்கள் என்று கூறும் அவசரக் கடிதம் ஒன்று, அக்கட்சியின் அந்தக் கடிதத் தலைப்பில் வரையப்பட்டது. அக்கடிதம் யாழ்.நகரில் உள்ள 512 ஆவது பிரிகேட் படைமுகாமின் கட்டளை அதிகாரிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அக்கடிதத்துடன் அந்தக் குழுவில் இணைந்து செயற்பட்டவர்களின் பெயர்ப்பட்டியல் ஒன்றும் இணைக்கப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் தாம் இதுவரை செய்த மோசடிகளையும் எதிர்காலத்தில் செய்ய இருக்கும் மோசடிகளையும் மூடிமறைக்கவும் அவற்றுக்கெல்லாம் அரசியல் சாயம் பூசவும் மேற்படி கடிதம் பெருமளவில் பயன்படும் எனறு அக்குழுவின் தலைவன் நம்பினான்.


இவர்தான் அசகாயசூரன் மசூத்

யாழ்ப்பாணத்தில் தனது நடவடிக்கைகள் தொடர்பாகப் பொலிஸாருக்கும் படையினருக்கும் சிறு சந்தேகம் கூட ஏற்படாத வகையிலேயே, இவ்வாறான பல முன்னேற்பாடுகளை அவர்கள் செய்துகொண்டனர்.

# பெரிய மீனைப் பிடிப்பது எப்படி....?

அந்த மோசடிக்கும்பலின் முக்கிய உறுப்பினர்கள் அடங்கிய குழு ஒன்று, கண்டி வீதியூடாக வடபகுதிக்குள் நுழைந்தது. விடுதலைப் புலிகளின் சோதனைச் சாவடியில் சுற்றுலாப் பயணிகளாகவே தம்மைப் பதிவு செய்துகொண்டது. யாழ்ப்பாணத்தில் உள்ள பள்ளிவாசல் ஒன்றில் தற்காலிகமாகத் தங்கியிருக்கப் போவதாகவும் அக்குழுவினர் அங்கே தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தை வந்தடைந்ததும் தமது நீண்ட நாள் நண்பர்களின் மிகவும் பாதுகாப்பான வாசஸ்தலத்தில் குடிபுகுந்து கொண்டனர்.

அதுதான் மக்கள் ஜனநாயகப் பேரவை என்ற அரசியற் கட்சியின் அலுவலகம்.

இந்த அரசியல் கட்சிக்கு எதிர்காலம் என்று ஒன்று இல்லாவிட்டாலும், கடந்தகாலம் குறித்த ஒரு சிறிய வரலாறு உண்டு. ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, யாழ். தீவுக் கூட்டத்தில் குட்டி இராஜ்ஜியம் நடத்திய காலத்தில், அக்கட்சியின் களநிலையினரான நம்பிக்கை நட்சத்திரங்கள் இராமேஸ்வரன், இராமமூர்த்தி என்ற இருவர். இவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த சமயம் ஜனாதிபதி சந்திரிகாவின் செல்லப் பிள்ளைகள். இவர்கள் டக்ளஸ் தேவானந்தாவுடன் முரண்பட்டுக் கொண்டதன் விளைவு புதிய கட்சி ஒன்று உதயமாகியது. அக்கட்சிதான் மக்கள் ஜனநாயகப் பேரவை.

இக்கட்சியின் ஆரம்பகாலத்தில் இராமேஸ்வரனும், இராமமூர்த்தியும் நாடாளுமன்ற உறுப்பினர்கள். அப்போதெல்லாம் அவர்களின் அந்த வாசஸ்தலம் இருபத்தினான்கு மணி நேரமும் ஆயுதம் தாங்கிய பொலிஸாரால் பாதுகாக்கப்பட்டு வந்தது. இவற்றைவிட, கைத்துப்பாக்கிகளுடன் இக்கட்சியின் உறுப்பினர்களும் காவல் பணிகளில் காணப்பட்டனர்.

அந்த நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்திப்பதற்காகப் பொதுமக்கள் பலர் அந்த அலுவலக வாசலில் காத்திருப்பார்கள். எந்தநேரமும் அந்த அலுவலகம் களைகட்டியிருக்கும்.

இக்கட்சியின் வசமிருந்த அந்த இரண்டு நாடாளுமன்றக் கதிரைகளும் கைமாறிப்போன பின்னர், அந்த அலுவலகத்தில் காணப்பட்ட ஆரவாரம் அடங்கிப்போய்விட்டது.

அதுவரைக்கும் அங்கு காணப்பட்ட ஆயுதங்கள் மாயமாக மறைந்துவிட்டன. எனினும், ஆயுதங்களின்றி காவல் கடமைக்காக ஒரு சிலர் அலுவலக வாயிலில் நிறுத்தப்பட்டிருப்பார்கள்.

**பனங்காட்டு நரியார் புலனாய்வில்...**

சரி, மீண்டும் - மோசடிக் கும்பல் கதைக்கு வருவோம்.

கடந்த ஆண்டு ஏ-9 பாதை திறக்கப்பட்டதும் இப்பாதையூடாகத் தென்பகுதியிலிருந்து சுற்றுலாப் பயணிகள் யாழ்ப்பாணத்துக்கு வருவது அதிகரித்தது. சுற்றுலாவுக்காகவே யாழ்ப்பாணம் செல்வதாகக் கூறிக்கொண்டுதான், அந்த மோசடிக் கும்பலும் யாழ். மண்ணில் கால் பதித்தது.

மக்கள் ஜனநாயகப் பேரவையுடன் ஏற்கனவே தமக்கிருந்த உறவைப் புதுப்பித்துக்கொண்ட இந்த மோசடிக் கும்பல், அக்கட்சியின் அலுவலகத்திலேயே குடியேறிவிட்டது.

முகமட் அலியார் மசூத் என்பவரின் தலைமையில் இக்குழு தனது செயற்பாட்டை ஆரம்பித்தது. முகமட் ருஸ்மி, முகமட் ஹமாஸ்தீன், முகமட் பைசஸ், அப்துல் ரஹீம் ஆகியோரும், க.மு.சாகிரா பர்வீன் என்ற இருபத்து மூன்று வயதுடைய இளம் பெண்ணும் இம்மோசடிக் கும்பலில் நேரடியாக இணைந்து செயற்பட்டுள்ளனர்.

இக்குழுவினரும் மக்கள் ஜனநாயகப் பேரவையும் இணைந்து செயற்பட்டது எவ்வாறு என்பது குறித்தும், இவ்விருதரப்புக்குமிடையில் இருந்த உறவு எத்தகையது என்பது குறித்தும் பல ஆச்சரியமூட்டும் தகவல்கள் இருக்கின்றன.

(தொடரும்...)

# வலுவிழந்தோருக்கு நம்பிக்கையூட்டும் பயிற்சிப் பட்டறை நேற்று ஆரம்பம்!

## ஐந்து நாள்கள் தொடர்ந்து நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

வலுவிழந்தவர்களுக்கு உளவியல் ரீதியான நம்பிக்கையை ஏற்படுத்தும் ஐந்து நாள் பயிற்சிப் பட்டறை நேற்று யாழ்ப்பாணம் வை.எம்.சீ.ஏ. கேட்போர் கூடத்தில் ஆரம்பமாகியது.

'சுனித்ரா பவுண்டேசன்' நிறுவனத்தினால் நடாத்தப்படும் இந்தப் பயிற்சிப் பட்டறையை ஜனாதிபதி சந்திரிகாவின் சகோதரி சுனித்திரா பண்டாரநாயக்க ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிறுவனத்தின் தலைவரான சுனித்திரா, கடந்த மாதம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தபோது வலுவிழந்தவர்கள் தங்கும் விடுதிகளுக்குச் சென்று அங்குள்ள வலுவிழந்தவர்களைச் சந்தித்திருந்தார்.


இவர்களுக்கான பயிற்சிப் பட்டறை ஒன்றினை நடத்த வேண்டுமென விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து இந்தப் பயிற்சிப்பட்டறைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.

தென்னிலங்கையிலிருந்து சுனிரா பவுண்டேசனின் உருவாக்கல் நெறியாளர் ரோகணதேவ, திருமதி ரோகணதேவ ரமணி தமயந்தி, ஆகியோரும், ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த உதவி உருவாக்கல் நெறியாளர் ஷன்கன் ஸ்ரங்கே ஆகியோருடன், வலுவிழந்த மாணவர்கள் உட்பட எட்டுப் போ இந்நிகழ்வுக்காக யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

இவர்களுடன் குடாநாட்டில் இயங்கும் வலுவிழந்தோர் பராமரிப்பு நிறுவனங்களைச் சேர்ந்த 40 பேரும் இப்பயிற்சிப்பட்டறையில் கலந்து கொண்டனர்.

நேற்றைய தினம், வலுவிழந்தவாகள் - ஆற்றுகையில் எந்தவகையில் ஈடுபடலாம் என்றவகையில் அரங்கப் பயிற்சிப் பட்டறை நடைபெற்றது.


சுனித்ரா பண்டாரநாயக்க



பயிற்சிப்பட்டறையில் ஒரு காட்சி

இந்தப் பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 13 ஆம் திகதிவரை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இந்த சுனித்ரா பவுண்டேசனை ஜனாதிபதியினுடைய சகோதரியான சுனித்ரா பண்டாரநாயக்கவே நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அவசர மனிதாபிமான பணிகளுக்கு உதவ சர்வதேச நிதி நிறுவனங்கள் இணக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் மேற்கொள்ளப்படவிருக்கும் அவசர மனிதாபிமான புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்குத் துறைரீதியாக உதவிவழங்க பல நிதிநிறுவனங்கள் முன்வந்துள்ளன.

கடந்தகால இராணுவ நடவடிக்கை காரணமாக வீடுகள், கட்டடங்கள், வீதிகள் மற்றும் பாடசாலைகள் என்று குடாநாட்டின் உட்கட்டுமானங்கள் மிக மோசமாகச் சிதைவடைந்துவிட்டன. ஆசிய அபிவிருத்தி வங்கி - குடாநாட்டில் சிதைவடைந்த வீதிகளையும், கட்டடங்களையும் புனரமைப்புச் செய்வதற்கு முன்வந்துள்ளது.

உலக வங்கி சேதமடைந்த வீடுகளையும், பாடசாலைகளையும் மீண்டும் புனரமைப்பதற்கும், புதிய பாடசாலைக் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கும் தனது உதவியை வழங்க முன்வந்துள்ளது.

இதேபோல, குடிநீர் விநியோகம் மற்றும் சுகாதாரம் போன்ற துறைகளில் ஏற்பட்ட சேதங்களை மதிப்பீடுசெய்து புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு 'யுனிசெப்' நிறுவனம் உதவி வழங்கவுள்ளது.

கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்கு 'யுனெஸ்கோ' நிறுவனம் நடவடிக்கை எடுத்துவருகிறது.

# குடிநீர் விநியோகத் திட்டங்களுக்கு உலக வங்கி 10 மில். டொலர் உதவி!

வட-கிழக்கில் குடிநீர் விநியோகம் மற்றும் சுகாதாரம் போன்ற துறைகளில் புதிய செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு உலக வங்கி பத்து மில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்க முன்வந்துள்ளது.

உலகவங்கி மேற்படி நிதி உதவியை வட - கிழக்கு மாகாண நிர்வாகத்தினூடாகவே வழங்குவதற்கு முடிவு செய்துள்ளது.

இதனைத் தொடர்ந்து வட-கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களிலும் இவ்வாறான செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு வட - கிழக்கு மாகாண நிர்வாகத்தினால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இதன் முதற்கட்டமாக இப்பகுதிகளில் உள்ள மாவட்ட அரசாங்க அதிபர்களிடமிருந்து சுகாதாரம், மற்றும் குடிநீர் விநியோகங்களை அபிவிருத்தி செய்யும் வகையான செயற்திட்டங்களைச் சமர்ப்பிக்கும்படி கோரப்பட்டிருக்கிறது.

யாழ்.மாவட்டத்தில் மேற்படி உலக வங்கியின் உதவித்திட்டத்தின் கீழ் மேற்கொள்வதற்காக சுமார் 17 செயற்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, வட - கிழக்கு மாகாணசபையிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இச்செயற்திட்டங்களை தற்போது வட-கிழக்கு மாகாணசபை அதிகாரிகள் பரிசீலித்து வருகின்றனர்.

## கசிப்புடன் கைதானோர் இன்று நீதிமன்றில் ஆஜர்

சட்டவிரோதமாகக் கசிப்பு விற்பனை செய்த இரு நபர்களை, யாழ். நகரப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் சிங்கள மகா வித்தியாலய வீதியில் வைத்து 48 லீற்றர் கசிப்புடன் பிடிபட்ட இரு நபர்களையும் பொலிஸார் இன்று நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளனர்.

இவர்கள் நீண்டகாலமாக கசிப்பு விற்பனையில் ஈடுபட்டுவருவதாகத் தெரியவந்துள்ளது.

# A-9 னை நீளும் நினைவுகள்

பகுதி - இருபத்திரெண்டு



இந்தக் காலத்தில் வவுனியா மாநகர்
எண்ணடங்கா வளர்ச்சிகள் கண்டது.
முந்தியோ... வெறும் சின்ன நகரென
முழித்திருந்திடும்; இரவுப் பயணிகள்
வந்துபோக உதவி வழங்கிடும்;
வர்த்தகத்தினால் சிறிது உயிர்த்திடும்;
சந்தியாகத் திகழும்; தமிழுக்கும்
சிங்களத்துக்கும் இடையே சிரித்திடும்!

இரண்டாங் கட்டத்து ஈழப்போர் யாழதன்
இசைநரம்பை அறுக்கத் தொடங்கவும்
எரிந்திடிந்து 'யாழ்' கற்களாய் மாறவும்,
எறிகணை நிதம் உயிரைக் குடிக்கவும்
வருந்தி நொந்து வதைபட்டு வந்தோரை
வவுனியா இரு கையால் அணைத்தது.
மறைந்து போருக்குத் தப்ப முனைந்தவர்
வாழ... வவுனியா வாழிடம் தந்தது.

யாழின் கல்வியைக் குண்டு சிதைத்ததால்
யாத்திரை சென்றார் மாணவர்; கற்றவர்
மாறி 'மாற்றலாய்' வவுனியா சேர்ந்தனர்.
வாடகை வீடு தேடிக் களைத்ததால்
வேறு சிலர் வீடு வாங்கினர்; ஏ-9
வீதியோடு புகை வண்டிப் பாதையால்
நேர்ந்து... தெற்குத் தொடர்பை விரும்பியோர்
நிலைத்து வவுனியாவோடே கலந்தனர்.

- ஜெயங்கொண்டான்.

# துயரின் கனம்

என்னறையிருந்து எதிர்வீட்டுக் குசினியோரம்
உன்னைநான் கண்டுவிட்டு
உட்கார்ந்தேன் ஜன்னலோரம்.
என்னை நீ கண்டிருக்க மாட்டாய்!
தனித்திருந்து,
விண்ணிலொரு புள்ளியினை
அடிக்கடி வெறித்துவிட்டு,
மடியிற் தலைவைத்து விசும்பி விசும்பி விழி
துடைத்தாய்;
உனக்கே நீ ஏதேதோ சொல்லி விட்டுக்
கடிதமொன்றை மார்பின் கதவிடுக்கில் இருந்தெடுத்துப்
படித்தாய்;
படித்து விட்டுக் கண்ணிலொற்றிக் கண்துடைத்தாய்.
மடித்து வைத்து மீண்டும்
மடியில் முகம் புதைத்தாய்.
மணிபார்த்தேன்... நள்ளிரவோ
பன்னிரெண்டைத் தாண்டிற்று!
அசதியெனை வீழ்த்திற்று... அயர்ந்தெழுந்து பார்க்கையிலும்
விண்ணை வெறித்தபடி விழித்திருந்தாய்
மணி மூன்று!
என்னுறக்கம் ஓடிற்று; "என்ன துயர் மூடிற்றுப்
பெண்ணே" எனக்கேட்க
முடியா அகாலத்தில்
உன்னை அறிய முடியா யதார்த்தத்தில்
நெஞ்செரிந்து போயிற்று!
வாடகை கொடுத்து விட்டு...
என்னறையைக் காலி செய்து திரும்புகிறேன்;
ஊர் மீளும்
வண்டியிலும் வழித்துணையாய்
உன்நினைவே வருகிறது.



- த.ஜெயசீலன்.

# வாழ்வை அழிக்க ஒரு வீடு!

விசாலாட்சி வெயிலிற் புழுவாய்த் துடித்தாள் "சண்டாளா! உன் 10 லட்சக் காசுக் கவலை, உன் பிள்ளையின் தாலியை அறுத்து

## பஞ்சாட்சரம் கதைகள் - 2



விட்டதே! அவள் வாழ்வில் மண்ணள்ளிப் போட்டுவிட்டதே!" என்று முற்றப் புழுதியில் கதறிப் புரண்டாள். மார்க்கண்டர் அவளைத் தேற்ற வழிதெரியாமல், தம் நெஞ்சை ஆற்ற முடியாமல் பரிதவித்தார்.

சற்று முன்புதான் பாரீஸிலிருந்து அவர் மகன் வரதன், தன் தங்கை சசியின்

# இலக்கியச் சோலை

கணவன் மாரடைப்பால் இறந்துவிட்டதாக அறிவித்திருந்தான்.

மார்க்கண்டர் தம் குற்றங்களை எண்ணிக்கலங்கினார். அவருக்கு ஒரு மகன்; ஒரு மகள். இங்கு மூண்டெரிந்த யுத்த நெருப்பில் பொசுங்காமற் காக்க, முதலில் தம் தோட்டக்காணியை விற்று மகனைப் பிரான்சுக்கு அனுப்பி வைத்தார். அவன் தன் தங்கையைப் 15 லட்சம் செலவில்

**ச.வே.பஞ்சாட்சரம்**

அழைத்துப் பிரான்சிலுள்ள நீர்வேலி இளைஞனுக்கு மணம் செய்து வைத்தான். சசிக்குப் பேசிய 10 லட்சம் சீதனம், மாப்பிள்ளை விருப்பப்படி, அவர் தங்கை திருமணத்துக்காக நீர்வேலிக்கு அனுப்பப்பட்டது.

தம்மகளின் சீதனம்- மருமகன் வீட்டுக்கு இனாமாகப் போனதையிட்டு மார்க்கண்டருக்கு மிகுந்த ஆவேசம். மருமகன் பின்னரும் பெற்றோருக்குக் காசனுப்பி வருவதை அறிந்தபோதோ, அவர் சன்னதமாடினார். "பெற்றுவளர்த்தவர்களைப் பிள்ளைகள்தானே பாதுகாக்கவேண்டும். காசுக்காக, என் பெண்பிள்ளைக்குப் பிரச்சினையை உண்டாக்காதே" என்று விசாலாட்சி கெஞ்சியதையும் அவர் காதில் விழுத்தவில்லை.

தம் மகளுக்குரிய வருவாய் இனியும் மாமியார் வீடு போகாமல் தடுக்கத் திட்டமிட்டு, செயலில் இறங்கினார் மார்க்கண்டர். அவர் தமது வளவுள் - மகளுக்குப் பெரிய வீடுகட்டக் காசனுப்பி வர மருமகன் இணங்க வைக்கப்பட்டார்.

தன்வீடு, தாய்வீடு, புதியதாகக் கட்டப்படும் வீடு - இவற்றுக்காகத் தினம் 16 மணி நேரம் ஓய்வுறக்கங்கெட்டு மருமகன் உழைக்க, இங்கே புது வீட்டுச் சுவர்கள் ஆளுயரம் வளர்ந்துவிட்டன.

தன் கணவன் கடும் உழைப்பால் இரத்த அழுத்த நோயாளியாகிவிட்டதாக ஒரு நாள் சசி அறிவித்தும், அப்பா விடாமல் கிட்டிகட்டியே வந்தார். வீடு வளர்ந்து கொண்டிருக்கும்போதுதான் இன்று மருமகனின் மரணச் செய்தி வந்தது.

"வாழ்வதற்கல்லவோ வீடு வாசல்! பாவீ! என் பிள்ளையின் வாழ்வை அழிக்க அல்லவோ வீடு கட்ட வெளிக்கிட்டாய்?" என்று விசாலாட்சி தன்னைப்பிடித்து உலுக்கியபோது, மார்க்கண்டர் சிலையாக நின்றார்.

# பாலையும் சோலையும்



*ஒன்றை நினைக்கின் அதுஒழிந்திட் டொன்றாகும்*
*அன்றி அதுவரினும் வந்தெய்தும் - என்றும்*
*நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்*
*எனையாளும் ஈசன் செயல்.*

என்னும் உண்மையானது என் வாழ்விலே வார்த்தைக்கு வார்த்தை பொருந்தியுள்ளது என்றே உணர்கிறேன்.

என் சிற்றப்பர், எனது பதின்மூன்றாம் வயதிலே கம்பு கொண்டு அடித்துப் பள்ளியிற் சேர்த்திராவிட்டால், என் மூத்த உறவினர் சிலரைப்போல அச்சுக் கோப்பாளனாகவோ, புத்தகம் கட்டுபவனாகவோ மாறியிருக்கலாம். அல்லது கடை ஒன்றிலே விற்பனையாளனாகவோ, கணக்காளனாகவோ காலத்தை ஓட்டியிருக்கலாம்.

ஆனால், பதின்மூன்று வயதிலே முற்றுப் புள்ளி வைத்திருக்கவேண்டிய என் படிப்பு, இருபது வயதுவரை நீண்டு, பல பள்ளிகளிலும் தரித்து நின்று, ஈற்றிலே ஆசிரியர் கலாசாலையிலும் கொண்டு விட்டதென்றால், நான் நினையாத ஒன்றே முன்வந்து நின்றதென்றால் இவையெல்லாம் எனையாளும் ஈசன் செயலன்றி வேறு என்ன?

ஆவரங்காலில் 1930 - ஜுன் - 2 ஆம் தேதி பிறந்த நான், 1932 தொடக்கம் 1948 வரை வண்ணார்பண்ணையிலும், 1948 முதல் இன்றுவரை நாயன்மார்கட்டிலும் என் வாழ்வை ஓட்டிக்கொண்டிருக்கிறேன். தாய்க்கு நான் ஒரேபிள்ளை. என் பெரியதாயோ பத்துப் பிள்ளைகள் பெற்ற பாக்கியவதி. நீண்ட நாள்களாகப் பிள்ளைப் பேறற்றிருந்த என் அன்னை, தமக்கையாரின் பிள்ளைகளைத் தன் பிள்ளைகள்போலவே வளர்த்தார்.

காலப்போக்கில் தரித்திர தேவதையின் பாதங்கள் எங்கள் குடும்பத்திலே தடம்பதித்தவேளை, பெரியம்மாவின் மக்கள் இருவரும், மகள் ஒருத்தியும் 'கெட்டும் பட்டணம் போ' என்ற நன்மொழியைப் பின்பற்றி வண்ணார்பண்ணைக்கு வந்து குடியேறினார்கள். எம் அன்னை, உன் அன்னை என்ற பாகுபாடோ - என் உடன பிறப்பு, நீ வேறு என்ற பாரபட்சமோ காட்டாது என் தாயையும், என்னையும் தங்களோடு அழைத்து அரவணைத்துக் கொண்டார்கள்.

ஆனால், என் தாய் அவர்களுக்கு முற்றும் பாரமாக இருக்காது, பலகாரம் செய்து விற்றும், மதிய உணவு ஆசிரியர் சிலருக்கு (முதல் இயலில் இதுபற்றிக் குறிப்பிட்டுள்ளேன்) வழங்கியும் - தம்மையும், என்னையும் காத்தார். நெருங்கிய, பற்றுப் பாசம் நிறைந்த உறவினர் பலரும் எம்மைச் சூழ்ந்து வாழ்ந்தமையால், என் சிறுவயதுப் பராயம் குதூகலமாகவே கழிந்தது. வறுமையிற் செம்மையாக வாழ்ந்த நாள்கள் அவை. இரண்டாம் உலக மகா யுத்தகாலத்திலும் (1939-1945) அதிகம் தளப்பமின்றி, சோறுண்ட இடத்தில் கஞ்சியோ, கூழோ, கோதுமைப் பண்டங்களோ நேரத்துக்கு உண்டு காலத்தை ஓட்டினோம். உணவுக் கட்டுப்பாட்டுப் புத்தக (RATION BOOK) அடிப்படையில் கிழமையில் ஆளுக்கு அரைப்படி அரிசி, இரண்டு இறாத்தல் கோதுமை மா, இரண்டு அவுன்சு செத்தல் மிளகாய் என்று வரையறுத்து வழங்கப்பட்டதும் உண்டு. யுத்தத்தின் தீவிரம் கூடக்கூட உலர் உணவு

## கலாநிதி.சொக்கனின் வாழ்க்கைப் பதிவுகள்

விநியோகம் குன்றிக்குன்றி வந்தது.

எனக்கும், அம்மாவுக்கும் வழங்கப்பட்ட உணவுக் கட்டுப்பாட்டுப் புத்தகங்களில் ஒன்றைக் கவலையீனமாக நான் தொலைத்துவிட்டேன். அக்காலத்தில் இவ்வாறு தொலைந்தவை ஈடுகட்டப்பட்டு மீண்டும் வழங்குவது அடுத்த வழங்கலின்போதுதான். எனவே, ஒரே உணவுக் கட்டுப்பாட்டுப் புத்தகத்துக்குப் பெற்றுக் கொண்டவற்றை வைத்து என் தாய் எவ்வாறு சமாளித்து, மூன்று வேளையும் எனக்கு உணவு வழங்கினார் என்பது இன்றும் புதிராகவே உள்ளது. அவர் காலை உணவுண்டதுமில்லை. என்னோடு உடனிருந்து உண்டதும் இல்லை. ஆனால், எண்பத்திரண்டு வயதில், படுக்கையில் வீழ்ந்து, எங்கள் பராமரிப்பிலிருந்து, இறுதி மூச்சைவிடும்வரை அவர் நோய் நொடி என்று பாய் படுக்கையில் கிடந்ததை நான் அறியேன். படுக்கையில் விழும்வரை தமது சேலையைத் தாமே தோய்த்து, உலர்த்துவது அவர் வழக்கமாயிருந்தது.

எப்பொழுதும் நெற்றியில் திருநீற்றுப் பூச்சும், கடுமையான சுத்தம் பேணுகையும், ஆசார அநுட்டானங்களும் தவறாத அவர் ஒரு தற்குறி. கையெழுத்தைக்கூட மிகச் சிரமத்தோடு இடும் அளவிற்கே படிப்பு. ஆனால், என் படிப்பில் நிரம்பிய அக்கறை (சிற்றப்பரை மறைமுகமாய் எனக்குத் தெரியாமல் தூண்டி - என் 13 வயதிலே பாடசாலைக்கு அடித்து அனுப்பச் செய்தவர் என் தாய்தான் என்பதைப் பின்னர் அறிந்தேன்). நின்றும், இருந்தும், கிடந்தும் எப்பொழுதும் படிக்கவேண்டும், நான் படிக்கும் காட்சியைக் கண்டுகளிக்க வேண்டும் என்றே உயிரைப் பிடித்து வாழ்ந்தவர்போலும்.

1974 ஆம் ஆண்டு அவர் காலமானார். அவருடைய தேவைகள், ஆசைகள் என்ன என்று குறிப்பாக அறிந்து நிறைவேற்றினால் உண்டு. தாமாகக் கேட்காது பிள்ளை கெட்டிக்காரன் என்பதால் எனக்குத் தொல்லைதரக் கூடாது என்று, தம் ஆசைகளை அடக்கி, ஒடுக்கிக்கொண்டே மறைந்து போனார். எத்தனை பிறப்பெடுத்தாலும் என் தாயின் தியாக வாழ்விற்கு ஈடுகட்ட என்னால் முடியாது என்றே உணர்கின்றேன்.

விட்ட இடத்திற்கு வருகிறேன். பலாலி ஆசிரியர் காலசாலையிலே பயிலுநனாகத் தெரியப்பெற்று, நேர்முகப்பரீட்சையின்போது வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கமைவாய் வாளி, றங்குப்பெட்டி, காக்கிக் குட்டைக் காற்சட்டை, தோளில் தெறிபோடும் தேசியச் சட்டை, துவாய், கைக்குட்டை, பெனியன் முதலிய சாமக்கிரியைகளுடன் என் (ஒன்றுவிட்ட) சின்னண்ணையோடு பஸ்ஸில் பலாலி சென்றடைந்தேன்.

தொடரும்....

# கிழக்கும் மேற்கும்

## கௌதம புத்தர் - சேர் ஐசாக் நியூட்டன்



முருகு

மரமொன்றின் கீழே
மெஞ்ஞான விளக்கம் பெற்றார் -
கிழக்கிலோர் ஞானி - அன்று!
மரமொன்றின் கீழே
விஞ்ஞான விளக்கம் பெற்றார் -
மேற்கிலோர் ஞானி - அன்று!!
கபிலவஸ்துவின் மன்னன்
சுத்தோதனன்!
அவனின் தேவி மாயாதேவி!
அவர்களின் குமாரன்
சித்தார்த்தன்!!
அம்பு பட்டதோர்
அன்னப் பறவையின்
இன்னுயிர் காத்தவர்
யதோத்தரையை மணந்து
பெற்றெடுத்து மகிழ்ந்தனர்.
ராகுலனை!
தேரில் உலா வருகையிலே
மூப்பு, பிணி,
இறப்பினால் மனிதர்
வருந்திடக் கண்டு
துறவினை ஏற்றிட்ட
சித்தார்த்தன்-
காரிருட்டினிலே
ந(த)ன்நகர் விட்டுக்
க(ந)டந்து களைத்ததால்
நினைவினை இழந்தார்!
இடைகுலச் சிறுவனின்
ஆட்டுப் பாலுண்டு
"சாதிகள் இல்லை" என்னும்
பேருண்மையை உண(ய)ர்த்தினர்!
போதனை - தவத்தால்
நிறைவு காணாதவர்
வைகாசித் திங்களில்
பௌர்ணமி தினத்தில்
வெள்ளரசு மரத்தின் கீழே
நிஷ்டையில் இருக்கையில்
"துன்பத்தின் காரணமும்
அதை வெல்லும் வழியும்"
அவர் சிந்தையில் உதித்தது!
ஞானோதயம் பெற்ற-
சித்தார்த்தன் தான்
"கௌதம புத்தர்"!
"ஆசையை விட்டால்
ஆனந்தம் உண்டாகும்" எனத்
தெளி(ரி)ந்து கொண்டவர் -
ஆகுதியாகப் பலியிடவிருந்த
ஆடுகள் இருநூறின்
ஆருயிர் காத்தனர்!
ஒன்றரை நாழி கடுகு
பெற்றுவரப்
பணிப்பதன் மூலம்
"இறப்பு இயற்கை"எனத்
தனயனை இழந்த
தாய்க்கும் - இந்தத்
தரணிக்கும் உணர்த்தினார்!
மனிதரைக் கொன்று
மரணித்தவர்களின் விரல்களை
மாலையாய் அணிந்த
அங்குலிமாலனைத்
தன்னன்புப் பேச்சினால்
ம(பு)னிதனாக்கினார்!
பசியேற்பட்ட வேளைகளில்
பிச்சையேற்றுண்டார்!
மற்றைய நேரத்திலவர்
மக்களுக்குத் தருமபோதனை!!
தம்மிறுதிப் பொழுதினை
"பாவா" எனுமூரில்
"சுந்தன்" வீட்டில்
தங்கியிருந்து
அவன் தந்த உணவை
உட்கொண்டதனால்
நோய் கண்டிடவேயவர்
"குசி" நகர் சேர்ந்தார்!
அங்கு புத்தர் தமது
எண்பதாம் அகவையில்
அவனி வாழ்வினை
நிறைவு செய்தார்!
புனிதர் புத்தரின்
புதுமைகள் பற்பல!
புனிதர் புத்தரின்
அற(றி)வுரை பற்பல!! (தொடரும்...)

# ஆழ வேரூன்றிய உலகக் குடிமகன் ஏ.ஜே.

ஏ.ஜேயுடனான (நானும் அவரை அப்படித்தான் அழைக்கப் பழகிவிட்டேன்) எனது தொடர்பும், மிகவும் சந்தோஷகரமான ஆரம்பகால யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில்தான் ஆரம்பித்தது. முதல் தலைவராகவிருந்த பேராசிரியர் க.கைலாசபதி காலம் அது. இன்றைய வித்தியாசமான பரம்பரைக்கு ஏறக்குறைய நம்பமுடியாதது என்னவென்றால், அக்காலத்தில் தமிழர்கள் மட்டுமல்ல சிங்கள-முஸ்லிம் மாணவர்களும், ஆசிரியர்களும் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் அங்கு போய் வாழ்ந்ததும் தொழில் பார்த்ததும் ஆகும். அத்துடன், அவர்கள் கலாசார, சமூக நடவடிக்கைகளில் பல்கலைக்கழக வளாகத்திலும், வெளியிலும் ஈடுபட்டவர்கள். மகிழ்ச்சியும், அமைதியும் நிறைந்த அந்த நாட்கள், 1977 ஆம் ஆண்டு இனவன்முறைகள் ஆரம்பித்தவுடன் வருந்தத்தக்கமுறையில் முடிவடைந்தன.

பேராசிரியர் கைலாசபதியின் அழைப்பின் பேரில் காலத்துக்குக் காலம் நான் யாழ்ப்பாணம் சென்று, ஒவ்வொரு நாளும் ஒரு வாசகம், பல மணிநேரம் கற்பித்தேன். அந்தக் காலத்தில் பல்கலைக்கழகம், துரைத்தனம் குறைந்த ஒரு சூழலிலேயே இயங்கிவந்தது. நாங்கள் இறுக்கமான பாடவிதானத்தால் கட்டுப்படவில்லை. அதிகமானகாலம் ரஷ்யக் கவிதைகளை மொழிபெயர்ப்பில் கற்பித்தேன். அதேயளவில் துரைத்தனமற்ற சூழலில் ஆங்கிலத்துறை மாணவர்கள் மட்டுமல்ல, ஆர்வமுள்ள பிறரும், பிறதுறை ஆசிரியர்களும் அந்த

## றெஜி சிறிவர்த்தன

வகுப்புகளுக்குச் சமுகமளித்திருந்தார்கள். அதற்கு ஒழுங்காகச் சமுகமளித்தவர்களில் ஏ.ஜேயும் ஒருவர். அந்த வகுப்புகள் ஒருவழி விரிவுரை அல்ல. கலந்துரையாடல் நேரங்களில் அவர்கள் உற்சாகமாகப் பங்குபற்றுவார்கள்.

கலந்துரையாடல்கள், சிற்றுண்டிச்சாலைகளில் தேநீர் அருந்தும் வேளைகளில்கூட பலவேளை தொடரும். அக்காலத்தில்தான் ஏ.ஜேயின் அறிவுத்திறன் குணத்தை நான் முதன்முதல் அறிந்தேன். அவரின் விரிந்த இலக்கிய ஆர்வங்கள் அவற்றின் சுறுசுறுப்பான ஆனால், கோட்பாடுகளை வற்புறுத்தாத சமூக உட்பொருள் கொண்ட தன்மைகள், சுயாதீனமும், தனித்தன்மையுடன் முடிவுகள் எடுப்பது போன்றவற்றை அறிந்தேன்.

அலெக்சாண்டர் ப்பொலிக்கின் கவிதைகள் பற்றிப் பல வகுப்புகள் நடந்ததாக எனக்கு நினைவுண்டு. ப்பொலிக் ஒரு குறியீட்டுக் கவிஞர். 1917 இன் ஒக்ரோபர் புரட்சி அனுதாபி. அவரின் முக்கிய கவிதையான பன்னிருவர் என்பது, புரட்சிக்குச் சில மாதங்களுக்குப் பின்னர் எழுதப்பட்டது. அந்தக் கவிதையின் முடிவில் பெற்றோகிறாட் வீதிகளில் ஒரு பனிக்கால இரவொன்றில் செம்படை வீரர்களுக்கு முன்னால் ஒரு நபர்- ஒரு செங்கொடியைத் தூக்கிக்கொண்டு போய்க்கொண்டிருக்கிறார். அவரின் உருவம் சுழன்றடிக்கும் உறைபனியில் மங்கலாகத்தான் தெரிகிறது. அவர் யாரென்று அடையாளம் காண அவர்களால் முடியவில்லை.

ஆனால், கவிதை அதன் கடைசி வரியில் கண்டுபிடிக்கின்றது. "அவர்கள் முன்னால் போகிறார் யேசுநாதர்". வைதீகத் தேவாலயங்களிலிருந்து புறம்பாக பல்லாயிர ஆண்டு ஆட்சியில் நம்பிக்கையுடைய, தீவிர கிறிஸ்தவத்தின் பேரார்வத்தை 1917 ஆம் ஆண்டு மக்கள் எழுச்சியில் இனங்காணும் முயற்சியே ப்பொலிக்கின் அக்கவிதை.

ஆனால், அக்கவிதையின் கடைசி வரியை நாங்கள் அடைந்தபோது செம்படையினரின் முன்னால் நடந்து சென்றது யேசுநாதர் போன்ற அந்த உருவமாக ப்பொலிக் அர்த்தப்படுத்தியிருந்தாலும், அதைவிட முன் சென்றவர் செம்படையினரிலும் பார்க்க மேலும் தீவிரமான தரிசனமுள்ளவர் என்று ப்பொலிக் அர்த்தப்படுத்தி இருக்கலாம் என்று ஏ.ஜே. சொன்னார். இந்தச் சாத்தியப்பாடு என் மனதுக்கு, அதற்கு முன்னர் தட்டுப்படவே இல்லை.



ஏ.ஜே.கனகரட்ணா

ஆனால், அது பொருண்மையுள்ளதாகவும், பயனுள்ளதாகவும் இருந்தது. அக்கவிதையின் புரிதலுக்கு, ஒருவருக்குப் புதிய காட்சிகளை அளித்தது. ப்பொலிக்கின் கவிதையைப் பற்றி ஏ.ஜே. ஒரு கட்டுரை எழுதியிருப்பதாக நான் அண்மையில் கேள்விப்பட்டேன். அந்தப் பெரிய ரஷ்யக் கவிஞனில் அவருக்கு ஆர்வத்தை ஏற்படுத்தி இருக்கிறேன் என்பதில் நான் சந்தோஷப்படுகிறேன்.

1977 இல் யாழ்ப்பாணத்துக்கு நான் ஒழுங்காகக் போய்வருவது நின்றது. ஆனால், அதைத் தொடர்ந்த ஆண்டுகளில் இடைகிடை அங்கு போய்வந்தேன். படிப்பிப்பதற்காகவல்ல, இனத்துவ முரண்களில் ஈடுபட்ட சமூகக் குழுக்களின் அங்கத்தவனாகச் சென்றேன். ஒவ்வொருமுறை நான் அங்கு சென்றபோதும், வழக்கமாக ஏ.ஜே. என்னைக் காணவந்தார். எங்களின் - நண்பரின் வீட்டில் நாங்கள் நீண்ட கலந்துரையாடல்கள் நடத்துவோம். அவரும், இன்னும் இரண்டொருவரும் என்னுடைய சில எழுத்துக்களை இடைக்கிடை தமிழில் மொழிபெயர்த்தார்கள்.

அதன் விளைவாக என் எழுத்துக்கள் சிங்களத்திலும் பார்க்கத் தமிழில் அதிகம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. பலமுறை ஏ.ஜே. என் நூல்களைப் புறவயமாகவும், நேர்மையாகவும் மதிப்பிட்டுள்ளார். அப்படியான துல்லியமான திறனாய்வாளர் ஒருவரின் எதிர்வினைகள் என் நூல்களுக்குக் கிடைப்பது எனக்குத் திருப்தி அளிக்கின்றது. மைய நீரோட்டப் பத்திரிகைகள் உண்மைகளைத் திரித்தும், கட்டுக்கதைகளை உருவாக்கித் தந்தும் கொண்டிருந்தவேளையில், தென்னிலங்கையில் வாழும் எனக்கும், அதேபோல சுயாதீன நோக்கர்களுக்கும் SATURDAY REVIEW அப்பத்திரிகையின் உற்பத்தியிலும், எழுத்திலும் ஏ.ஜேக்கு முக்கியமான பங்கிருந்தது தான். யாழ்ப்பாணத்தவர்கள் என்ன நினைக்கிறார்கள். அங்கு என்ன நடக்கின்றன என்பவை பற்றிய உண்மைகளை அறிவதற்கு ஒரேயொரு ஊடகமாக இந்தப் பத்திரிகை இருந்தது.

முற்றுகையிடப்பட்ட யாழ்ப்பாணத்தில் நலக்குறைவுடன் வாழ்வது மட்டுமல்லாமல், தனக்குப் பிடித்த வேலைகளைச் செய்யமுடியாமல் கட்டுப்படுத்தப்படுவதாலும், கொழும்புக்குக் குடிபெயர்ந்து வரச்சொல்லி யுத்தகால இருண்ட ஆண்டுகளில் ஒருமுறை ஏ.ஜேக்கு- என்னுடைய நண்பர் மூலம் சொல்லி அனுப்பினேன். கொழும்பில் பயனுள்ள திருப்திகரமான வேலையொன்றை அவருக்குக் கிடைக்கச் செய்யலாம் என்று நான் நம்பினேன். அதற்கு அவர்தான், அங்கு "சேற்றில் அழுந்திய தடி" மாதிரி இருப்பதாகவும், தன்னைக் கொழும்பில் மறுநடவு செய்யத் தனக்கு விருப்பமில்லை என்றும் பதிலளித்திருந்தார்.

உலகக் குடிமகனுக்குரிய கலாசாரமும், சர்வதேச பிரக்ஞையுடைய புத்திஜீவியான ஏ.ஜே. யாழ்ப்பாண மண்ணிலும், அதன் வாழ்விலும், அனுபவத்திலும், மொழியிலும் ஆழவேரூன்றியுள்ளார் என்பதை அதிலிருந்து நான் உணர்ந்துகொண்டேன். யாழ்ப்பாணத்தை - அதனுடைய பெரும் சோதனைகாலத்தில் விட்டுவருவதை ஒரு துரோகச்செயல் என்று அவர் கருதியிருக்கலாம்.

நன்றி "காலம்".

# புத்தூர் வே.இளையகுட்டியின் 'ஆண் பாவம்'




புத்தூர் வே.இளையகுட்டி எழுதி - அன்றாடம் தினசரிகளிலும், சஞ்சிகைளிலும் வெளிவந்த சுமார் முப்பத்தைந்து கவிதைகள் அடங்கிய தொகுதியே ஆண்பாவம்.

வயதில் மூத்த இக்கவிஞர், "எனது அனுபவ முதிர்ச்சிவரை சமூகத்தைப் பார்த்தவன்... இக்கவிதைகள் உள்ளத்தில் கருக்கொண்ட காலம் நெடியது, உருக்கொண்டகாலம் சிறியது" என்ற முன்னுரை வரிகளிலிருந்து தனது ஆழ்ந்த - அகன்ற சமூகப்பார்வையும் சமூகத்தின் நெருக்குதல்களுமே தன்னுடைய அனுபவ முதிர்ச்சிமிகு கவிதைக்குக் கால்கோள் என்பதைச் சொல்லாமற் சொல்லி நிற்கிறார்.

இவ்வாறு சமூகத்தால், சமூகத்திற்காக எழுத முன்வந்து எழுதிய கவிஞர், "காலத்தின் தேவைகூறும் கருப்பொருள் விடுத்து - சும்மா, மோகத்தின் எழிலும், மோகன வாசத்தின் வியப்பும் பாடி, காலத்தை வீணடிக்கும் கவிதையான் பாடமாட்டேன். நாவினில் ஒன்று கூறி, நடிப்பினால் ஒன்றுசெய்யும் போலிகள் திரை கிழிப்பேன்" என்ற உறுதியுரை மூலம் இயற்கையழகு, காதலுணர்ச்சி போன்ற விடயங்களைத் தேடி ஏங்குவோர்க்குப் பதில் சொல்லிவிடுகிறார்.

இவரது தொகுதியிலே எமது சமூகத்தின் ஒழுங்கைமாற்றி, சீரற்ற பாதையில் இழுத்துச்செல்லும் - சினிமா, சீதனம், அரசியல், வெளிநாடு, மூடநம்பிக்கை, தற்காலக்கல்விமுறை போன்ற இன்னோரன்ன கவிஞரின் உள்ளத்தை நெருடிய பல விடயங்கள் எமது உள்ளத்தை வருடிச்செல்லும் பாங்கு மிக அற்புதமானது.

## நூல் அகம்

அந்த வகையிலே "கொக்கோக நுண்மைகளைக் குழந்தைக் கூட்டும் தரூரத் தன்மையுடைய" சினிமா, "நாளைக்கு முழுதாய் நீலமாய் மாறி சமூகத்தை நாறவைக்கும்" என்று எதிர்காலச் சந்ததியின் பரிதாப நிலையெண்ணி ஏங்குகிறார். அத்தோடு அவரின் "பால்யத் துறவியாய் அலையும்" புலமைப்பரிசில் மாணவனுக்காக நளினமுடன் பரிந்துரைக்கும் தன்மை நோக்கற்குரியது. தொடர்ந்து "பௌதீக நுட்பத்தால் அவன் வளர - பழம் பரம்பரையை மென்று துப்பி வாழ்விழந்தோம்" என்றும் "பஞ்சாங்கத்தையும், பல்லி சொற்பலனையும் நம்பியிருந்தால் எப்படி நாம் வளர்வோம்" என்று மூடக்கொள்கைக்கு முடிவுகேட்டுச் சமூகத்தை அறிவியல் வளர்ச்சியோடு இணைப்பதற்கு அங்கலாய்க்கிறார்.

அத்தோடு, அதிகாரவர்க்கத்தால் ஒடுக்கப்பட்ட ஏழைகளுக்கு "கொடுவாளை எடடா - மிகு, கொடியோர் செயலறவே" என்று நம்பிக்கை வாளைத் தோளிலே மாட்டி கொடியோரைக் கதிகலங்கவைக்கிறார்.

இவ்வாறு பல்வேறுபட்ட விடயங்களைப் புரட்சிகரமாகத் தொட்டுச் சென்ற கவிஞர் பெண் ஒடுக்குமுறை, சீதனக்கொடுமை மற்றும் "சென்றுவிடு என்று வெளிநாட்டான் துரத்த ஒவ்வொரு நாடாய் இவன் ஒளித்து விளையாட" என்று வெளியில் எம்மவர் படும் துயர்கள் அனைத்தையும் உரைத்த கவிஞர் சற்று வித்தியாசமாக ஆணின் விடுதலையையும் முதன்மைப்படுத்துகிறார். அதனாலோ என்னவோ தொகுப்பிற்குப் பெயரும் ஆண்பாவம். அத்தோடு, சுமக்கமுடியாத சுமை ஒன்றை ஒருவன் சுமப்பதை அட்டைப் படம் உணர்த்துவதோடு, ஆணின் விடுதலைக்காக இரண்டு வரி கவிப்பிச்சை கேட்பதோடு, பின் அட்டை கையசைக்கும் போது முடிந்துவிட்டதா எனும் ஏக்கம் உள்ளத்தை ஆக்கிரமிக்கிறது.

கலாநிதி முருகையனின் அணிந்துரையுடன் எளிமையாக, சிறப்பாக அச்சேறிய தொகுப்பு அனைவரையும் கவருமென்பதில் ஐயமில்லை. இடையே "கட்டுதற்குக் கோவணமும் இல்லாவேளை - நாம் பட்டுடுக்கும் கனவினிலே திளைத்திருந்தோம்" என்ற வரிகள் "பட்டுவேட்டிக்குக் கனவு கண்டுகொண்டிருந்தபோது, கட்டியிருந்த கந்தலும் களவாடப் பட்டதே" என்ற தமிழகக் கவிதை ஒன்றை நினைவூட்டியது.

இங்கே கவிஞர் வேற்றுக் கருத்தொன்றை எடுத்து, தனது பாணியிலே கவி வடிவம் கொடுத்திருப்பது புலனாகின்றது. அதுபோக, தனக்கென ஒரு சிறந்த தனிப்பாணியுடைய கவிஞர் - இன்னுமின்னும் பல கவிதைகள் தந்து தமிழுக்கும், சமூகத்திற்கும் வளஞ்சேர்க்க வேண்டி வாழ்த்தி நிற்போமாக!

- நடமாடி.

# பெயரிடாத கவிதை



ஆகாயம் குழம்பு பூசும்!
ஆழ்கடலில் பொன் பொரியும்
ஆங்காங்கே; ஆட்காட்டிகள்
அவலக் குரலெழுப்பும்!
அத்தனையும் மீறி,
ஆதவன் அகன்றுவிட
அகிலமெலாம் இருள் போர்க்கும்!
அடி வானில் வெள்ளிநிலா,
அரங்கமேறும்.
இடையிடையே பனை ஓலைகள்
சரசரக்கும்.
பீதியிலே தெருநாய்கள்
ஊளையிடும்!
கூடல் காற்றில்
களைப்பகலச் சிறுதூக்கம்!
மென் பனிகள் குறும்பு செய்ய
என் கனவு கலைந்தோடும்...

- உ.தமிழ்மாறன்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு
பழைய குருடி கதவைத் திறவடி
- தமிழ்ப் பழமொழி.

# நமது நோக்கு

## பாதை மாறவில்லை?

முன்னெடுக்கப்பட்டுவரும் சமாதான முயற்சிகளுக்கு நேரடியான, பகிரங்க எதிர்ப்பினைக் காட்டுமுகமாக - பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பி.யும் இணைந்து இன்று பெருமெடுப்பிலான ஆர்ப்பாட்டப் பேரணியை கொழும்பில் நடத்தவுள்ளன.

வழக்கமாக இவ்வாறான பேரணிகள் அரசாங்கத்தை, அரசாங்கத்தின் செயற்பாடுகளை எதிர்த்து நடாத்தப்பட்டுவந்த நிலையில் - இன்று நடக்கும் பேரணி, இன விரோதத்தைத் தூண்டும்விதமாகவும் நடத்தப்படலாமென அச்சம் பரவியுள்ளது.

கொழும்பிலுள்ள தமிழர் பகுதிகளில் - இந்தப் பேரணியின் தொடர்ச்சியாக தாக்குதல் முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம் என்ற அச்சம் பரவியிருப்பதாக நேற்று நள்ளிரவு வரை எமக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொதுஜன ஐக்கிய முன்னணியில் ஏற்பட்டுள்ள தலைமைப் போட்டியில் - மகிந்த ராஜபக்ஷவை ஓரம்கட்டுவதற்காகக் களமிறக்கப்பட்டுள்ள அனுரா பண்டாரநாயக்கவின் நேரடித் தலைமையில் நடைபெறும் இப்பேரணி மூலமாக, பலவகைகளிலும் காரியங்களைச் சாதித்துக்கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறு ஒரு பேரணி நடத்தப்படுவதாக தீர்மானிக்கப்பட்டதிலிருந்து, இந்த முயற்சிகளிலிருந்து மகிந்த ராஜபக்ஷ ஒதுங்கியுள்ளதாக அல்லது ஒதுக்கப்பட்டிருப்பதாகவே தெரிகின்றது.

அதேவேளை - பொதுஜன ஐக்கிய முன்னணியின் கூட்டுக்கட்சிகளான சமசமாஜக் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் இந்தப் பேரணியில் பங்குபற்றப்போவதில்லை என அறிவித்திருக்கின்றன.

இந்நிலையில் - அனுரா பண்டாரநாயக்க மிக முனைப்புடன இத்தகையதொரு பேரணியை நடாத்துவதற்கு - குறிப்பாக, ஜே.வி.பி. யுடன் இணைந்து நடாத்துவதற்கு -

அடுத்த தலைமைப் பதவி பற்றிய முயற்சிகளுக்கு வலுச்சேர்ப்பதுடன், ஜே.வி.பி.யின் துணையுடன் தன்னைப் பலப்படுத்தக்கொள்வதும் இலக்குகளாகின்றன.

அதேவேளை - கூட்டணிக்குள்ளும், கட்சிக்குள்ளும் முரண்பாடுகளைத் தோற்றுவித்திருக்கும் ஜே.வி.பியுடனான அரசியல் கூட்டுக்கு, பகிரங்கமாக ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கும் - இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளவும் முனைப்புக் காட்டப்படுகின்றது.

அதேவேளை - அனுரா மற்றும் ஜே.வி.பியின் இந்த நடவடிக்கைக்கு - ஜனாதிபதி தரப்பிலிருந்தும் ஆசீர்வாதமும் உதவிகளும் வழங்கப்படுவதையும் -

இன்றைய பேரணியின் பாதுகாப்புக்கு, தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு விசேட உத்தரவிடும் அளவுக்கு ஜனாதிபதி சந்திரிகா காட்டும் ஆர்வத்தையும் கூர்ந்து நோக்கும்போது, இந்தப் பேரணியூடாக - சரிந்துவரும் தனது செல்வாக்கை நிலைநிறுத்திக்கொள்வதற்கு ஜனாதிபதி கவனம் செலுத்தி வருவதையும் அறியமுடிகின்றது.

ரணில் அரசாங்கம் - விடுதலைப் புலிகளுடன் நடாத்திவரும் சமாதானப் பேச்சுக்களும், போர்நிறுத்தமும் - அதனால் தென்பகுதியில் ஏற்பட்டுள்ள சுமுகநிலையும் உருவாக்கிவரும், ரணில் அரசாங்கம் மீதான வரவேற்பும், அமைதிக்கான ஆதரவும் - தனது அரசியல் எதிர்காலத்திற்கு நல்ல சமிக்ஞைகளைத் தரப்போவதில்லை என உணர்ந்திருந்த நிலையில் - அக்குரஸ்ஸ பிரதேச சபைத் தேர்தலில் கிடைத்திருக்கும் வெற்றி மூலம் உற்சாகம் பெற்றிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க -

சூட்டோடுசூடாக இந்தப் பேரணியையும் நடாத்தி, அரசியல் ரீதியாக தனது பலத்தை மீண்டும் வலுக்கூட்டுவதற்கும் தயாராகிவிட்டார்.

ஜே.வி.பியின் தரப்பிலோ - இன்றைய ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொள்வது பற்றி முதலில் முழுமையான சம்மதம் தெரிவிக்கப்படாதபோதும் - அனுரா பண்டாரநாயக்க தான் முதலில் அறிவித்திருந்ததுபோல எங்கே 10 லட்சம் பேரைத்திரட்ட முடியாது போய்விடுமோ என்ற அச்சத்தில் - ஜே.வி.பியை வலிந்திழுத்ததன் பேரில் - ஜே.வி.பி.யும் இன்றைய பேரணியில் முக்கிய பங்குதாரராகிவிட்டது.

பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைய விரும்பினாலும் - தனக்கான பலமொன்று தெற்கில் இருக்கிறது என்ற நம்பிக்கையுடன் இருக்கும் ஜே.வி.பி.- தனது பலத்தின் மூலம் பொதுஜன ஐக்கிய முன்னணியை வளர்க்கவோ அல்லது அதற்கு உரமூட்டவோ விரும்பாததே முதலில் அது தயங்கியதற்குக் காரணமாகவும் இருந்தது.

ஆனாலும் - சமாதான முயற்சிகளுக்கான எதிர்ப்பு என்ற ரீதியில் பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பி.யும் இன்றைய பேரணியில் களமிறங்கத் தயாராகிவிட்டன.

இவ்விதம் பலவாறான பின்னணி இலக்குகளுடன் இன்று நடைபெறுகின்ற பேரணி - சிங்கள மக்கள் மத்தியில் செல்லுபடியாகும் என பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பியும் நம்பும். தமிழர் விரோதத்தை ஏகத்துக்கும் கிளப்பிவிடுவதுடன் - அதனூடாக பிரச்சினைகளையும் தூண்டி, தமது அரசியல் இலாபக்கணக்கில் மேலும் வரவுகளைச் சேர்த்துக்கொள்ள முயற்சிப்பதானது -

இன்னமும் பௌத்த சிங்கள அரசியலின் போக்கு மாறிவிடவில்லை என்பதையே காட்டுகின்றது.

அதேவேளை - கடந்தகாலங்களைப் போலவே - தமிழர் விரோதக் கருத்துக்கள், செயற்பாடுகள், வெளிப்பாடுகள் மூலம் பெற்றுவந்த ஆதாயங்கள் - இன்று சர் வதேசமும் இலங்கையில் அதிகவனம் செலுத்தும் நிலையில் எவ்விதமான விளைவுகளை ஏற்படுத்தப்போகின்றன? என்பதற்கு இன்றைய பேரணியும், அதன் தொடர்ச்சியான சம்பவங்களும் விடைதரக்கூடும் என்றும் சொல்வதற்கு இடமுண்டு.

# அரசுக்கு எதிரான இன்றைய பேரணியில் பாதுகாப்பை அதிகரிக்க சந்திரிகா உத்தரவு!

இன்று கொழும்பில் நடத்தப்படவுள்ள அரச எதிர்ப்புப் பேரணிக்கு மேலதிக பாதுகாப்புக்களை வழங்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - ரணில் விக்கிரமசிங்கவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளைக் கண்டித்தும், விலைவாசி உயர்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் இன்று பொதுஜன ஐக்கிய முன்னணி மாபெரும் பேரணிக்கு ஏற்பாடு செய்துள்ளது. இப்பேரணியில் ஜே.வி.பியும் பங்கேற்கவுள்ளது. சுமார் 10 லட்சம் பொதுமக்கள் இப்பேரணியில் கலந்துகொள்வர் என்று பொதுஜன ஐக்கிய முன்னணி தெரிவித்திருந்தது.

இந்த அரச எதிர்ப்புப் பேரணியில் குழப்பம் விளைவித்து- அதன்மூலம் இனக்கலவரத்தைத் தூண்டிவிட்டு, பழியைத் தம் மீது போட்டுவிட முயற்சிகள் எடுக்கப்படுவதாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி சந்திரிகாவுக்கு கடிதம் மூலம் தெரிவித்திருந்தார்.

இதையடுத்தே, இத்தகைய கலவரங்களைத் தூண்டும் முயற்சிகளைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கும்படியும் மேலதிக பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யுமாறும் ஜனாதிபதி சந்திரிகா-பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அறிவித்துள்ளார்.

இதேவேளை பேரணியில் பங்கேற்கவுள்ளவர்களில் சிலர் கடைகள், வீடுகளை எரிக்கத் திட்டமிட்டுள்ளதாக தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாகவும், இதனைத் தடுப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இத்தகைய சம்பவங்கள் எதுவும் இன்று நடக்க அனுமதிக்கமாட்டோம் என்றும், பாதுகாப்புக் கருதி பேரணி செல்லும் பாதைகளில் சில போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# விமான எதிர்ப்பு ஏவுகணைகளை புலிகள் ரஷ்யாவில் வாங்க முயற்சி!

## அரசுக்கு ரஷ்யத் தூதுவர் உத்தியோகப்பற்றற்ற அறிக்கை

தரையிலிருந்து வான்நோக்கிச் செலுத்தப்படும் ஏவுகணையையும், இராணுவத் தளபாடங்களையும் ரஷ்யாவிலிருந்து விடுதலைப் புலிகள் கொள்வனவுசெய்ய முயற்சித்ததாக - கொழும்பிலுள்ள ரஷ்யத் தூதுவர் மிகெய்ல் ஜி.கார்போவ் - இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கு வழங்கியுள்ள உத்தியோகபூர்வ மற்ற அறிக்கையில் (NON PAPER) தெரிவித்துள்ளார்.

இராஜதந்திரரீதியில் உத்தியோகபூர்வமற்ற விடயங்களைத் தெரியப்படுத்துவதற்காக, இந்த உத்தியோகபூர்வமற்ற அறிக்கை வழங்கப்படுவது வழக்கமாகும்.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

லாவோஸில் உள்ள ரஷ்யத் தூதரகம் ஊடாக இரண்டு இலங்கையர்கள் ரஷ்யாவின் அரசாங்க அயுத நிறுவனத்திடமிருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய முயன்றனர்.

இவர்கள் தரையிலிருந்து விண்ணுக்குச் செலுத்தப்படும் விமான எதிர்ப்பு எஸ்-ஏ ரக ஏவுகணைகள் மற்றும் சிறிய ஆயுதங்களை வாங்க முயன்றனர்.

இவர்களில் ஒருவரின் பெயர் தங்கராஜா என்றும், இவர்கள் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்றும் சந்தேகிக்கப்பட்டதால் - ஆயுத விற்பனவு நடவடிக்கையை இடைநிறுத்த ரஷ்ய அரசாங்கம் முடிவு செய்தது. அத்துடன், இது தொடர்பான தகவல் லாவோஸ் அரசாங்கத்துக்கும் தெரியப்படுத்தப்பட்டது என்று ரஷ்யத் தூதுவர் வழங்கியுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை - புலிகள் ஏஸ்-ஏ 14 ரகத்தைச் சேர்ந்த விமான எதிர்ப்பு ஏவுகணைகளை ஏற்கனவே பயன்படுத்தியதை இராணுவ அதிகாரிகள் உறுதிப்படுத்தியதுடன், இதைவிட நவீன ரகத்தைச் சேர்ந்த ஏவுகணைகளைக் கொள்வனவு செய்ய அவர்கள் முயற்சி செய்து வருவதாகவும் இராணுவ அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

# மாகாண சபையின் நடமாடும் சேவை யாழ்ப்பாணத்தில் நடத்தக் கோரிக்கை

வட-கிழக்கு மாகாண சபையின் நடமாடும் சேவை ஒன்றை யாழ்ப்பாணத்தில் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டிருக்கிறது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட வட-கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் ரங்கராஜாவிடமே மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டிருக்கிறது.

வட-கிழக்கு மாகாண நிர்வாகத்துடன் தொடர்பான ஏகப்பட்ட பிரச்சினைகளை குடாநாட்டு மக்கள் எதிர்கொண்டு வருகின்றனர். வசதி குறைந்த யாழ்ப்பாண மக்கள் அநேகமானவர்கள் தமது அலுவல்களுக்குக்காக மாகாண நிர்வாகத்தைத் தேடி திருகோணமலைக்குச் செல்லமுடியாத நிலையிலுள்ளனர்.

எனவே, மிகவிரைவாக மாகாண நிர்வாகத்தின் நடமாடும் சேவை ஒன்றை யாழ். குடாநாட்டில் நடாத்தும்படி பிரதம செயலாளரிடம் முன்வைக்கப்பட்டிருக்கும் கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# சிங்கள, தமிழ், முஸ்லிம் திரைக்கதையாளர்கள் பங்கேற்கும் 'ஸ்கிறிப்ற் நெற்' பயிற்சி முகாம்!

## மூன்றாம் கட்டம் யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும்

(கொழும்புத்துறை)

'சமாதானச் சுருள்' - ஸ்கிறிப் நெற் திரைக்கதை உருவாக்கலுக்கான பயிற்சி முகாமின் மூன்றாம் சுற்று எதிர்வரும் 18 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகு 'ஸ்கிறிப்ற் நெற்' நிறுவனத்துடன் இணைந்து ஏற்பாடு செய்த, திரைக்கதை உருவாக்கலுக்கான முதலாம் சுற்று மற்றும் இரண்டாம் சுற்றுக்கான பயிற்சியானது - சென்ற வருடம் டிசம்பர் 16 ஆம் திகதி முதல் இவ்வருடம் பெப்ரவரி 20 ஆம் திகதிவரை வெற்றிகரமாக நடந்தேறியது.

இப்பயிற்சியில் பங்குபெறுவதற்காக வடக்கு-கிழக்கிலிருந்து 170 எழுத்தாளர்கள் தமது கதைகளை அனுப்பியிருந்தனர். அவற்றில் 30 கதைகள் முதலாம் சுற்றுக்குத் தெரிவு செய்யப்பட்டு, அவ் எழுத்தாளர்களுக்கான திரைக்கதை உருவாக்கல் பயிற்சியானது லண்டன் பல்கலைக்கழகத்திலிருந்து வருவிக்கப்பட்ட ஜூடி ஹொலண்டால் நடாத்தப்பட்டது.

கரு உருவாக்கல், கட்டமைப்பு, பாத்திர உருவாக்கலும் வளர்ச்சியும், கட்புல எழுத்து (VISUAL WRITING), கதை நகர்வு, திரைக்கதை நியம வடிவமைப்பு (STANDARD LAYOUT) மற்றும் நவீன திரைக்கதை உத்திகள் போன்ற பயிற்சிகள் இப்பயிற்சி முகாம் ஊடாக பயிற்றுவிக்கப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக இரண்டாம் சுற்றுப்பயிற்சி முகாமிற்கான திரைக்கதைகள் பயிற்சியாளர்களிடமிருந்து கோரப்பட்டன. 30 பயிற்சியாளர்களிடமிருந்தும் கிடைத்த திரைக்கதைகளில் இருந்து விசேட திரைக்கதை உருவாக்கல் பயிற்சிகளை வழங்குவதற்கு 15 திரைக்கதை எழுத்தாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தெரிவுசெய்யப்பட்ட பயிற்சியாளர்களுக்கான விசேட பயிற்சி கடந்த பெப்ரவரி 3 ஆம் திகதிமுதல் 12 ஆம் திகதி வரை காலை 8.30 தொடக்கம் மாலை 5 மணிவரை யாழ். பல்கலைக்கழக சிற்றி ஹோலில் நடைபெற்றது. பயிற்சியை, இங்கிலாந்து திரைப்படத்துறை திரைக்கதை எழுத்தாளரும் எடிட்டருமான நோவெல்லா ஸ்மித் வழங்கினார்.

மூன்றாம் சுற்றுப் பயிற்சி முகாமிற்கு, இரண்டாம் சுற்றில் கலந்து பயிற்சிபெற்ற 15 பயிற்சியாளர்களிடமிருந்து 8 பேர் மட்டுமே தெரிவுசெய்யப்படுவர். இதன் விசேட பயிற்றுநர்களாக லண்டன் போர்ன்மவுத் பல்கலைக்கழக (BOURNEMOUTH UNIVERSITY) விரிவுரையாளரான ஜோண் பொஸ்ரர் (JOHN FOSTOR) மற்றும் பிரித்தானிய சினிமாத்துறை திரைக்கதைத் தொகுப்பாளர் சாம் லவண்டர் (SAM LAVENDOR) ஆகியோர் கடமையாற்றுவர். மூன்றாம் சுற்றுப் பயிற்சியின் முதற்பாகம் எதிர்வரும் 18 ஆம் திகதிமுதல் 21 ஆம் திகதிவரை யாழ்ப்பாணத்திலும், நிறைவுப்பாகம் 24 ஆம் திகதியிலிருந்து 27 ஆம் திகதிவரை கொழும்பிலும் நடைபெறும்.

கொழும்பில் நடைபெறவிருக்கும் மூன்றாம் சுற்று நிறைவுப் பாகத்தை இலங்கையின் பல்லினத் திரைக்கதை எழுத்தாளர்களும் பங்குகொள்ளும் கூட்டுப்பயிற்சிமுகாமாக நடாத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இதில் சிங்கள, தமிழ், முஸ்லிம் திரைக்கதை எழுத்தாளர்கள் பங்குபெறுவர்.

இப்பயிற்சிநெறிக்காகத் தமது திரைக்கதைகளை அனுப்பி வைத்து, தேர்வு செய்யப்படாமல் இருக்கும் படைப்பாளிகள் தொடர்ந்து தங்கள் ஆக்கபூர்வமான பங்களிப்புகளை திரைக்கதை உருவாக்கல் துறையில், தாயக மண்ணில் வழங்க வேண்டுமென எதிர்பார்ப்பதகாக 'ஸ்கிறிப்ற் நெற்' அறிவித்துள்ளது.

ஈழத்துத் திரைப்படத்துறை வளர்ச்சி தொடர்பாக 'ஸ்கிறிப்ற் நெற்' தனது வேலைத்திட்டங்களை விஸ்தரிக்கத் தீர்மானித்துள்ளதாகவும் இத்துறை சார்ந்த ஏனைய ஆர்வலர்களும், தமது பங்களிப்பை வழங்கவேண்டுமென 'ஸ்கிறிப்ற்நெற்' எதிர்பார்ப்பதாகவும், ஆர்வம் உள்ளவர்கள் - கா.ஞானதாஸ் திட்ட இணைப்பாளர், 'ஸ்கிறிப்ற் நெற்', புறநிலைப்படிப்புகள் அலகு, யாழ்.பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் தமது தபால் தொடர்புகளை மேற்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (60)

# மூச்சடக்கி, நெரிசல்பட்டு தவமியற்றும்

# ஒரு மினிபஸ் 'த்ரில்' பயணம்!



## முகமாலையிலிருந்து யாழ். நகர் வரை ஓர் அனுபவம்

"பின்னுக்கு எவ்வளவு இடமிருக்குப்பாரடா. எல்லாரையும் பின்னுக்கு அனுப்பு".

"யாழ்ப்பாணமா எண்டு கேட்டு ஏத்தடா". "கனசனம் கொடிகாமத்தில இறங்கப் போகுதுகள். சீற் தாறன் எண்டு ஏத்து"

"சின்ன பஸ்ஸுக்குள்ள எப்பிடி இறுக்கி ஏத்தி இருக்கிறன். உதைப் பாத்தாவது பழகு".

"பிள்ளையளோடை நிக்கிறதுகளை ஏத்தாத, பின்னுக்கு பஸ் வருகுது என்று சொல்லு".

".... அவன் இப்பத்தான்ரா போறான். கலைச்சுப் பிடிக்கிறன் பார்".

"சனத்தை கெதியா இறக்கி, ஏத்து".

"மூட்டையளோடை நிற்கிறவரைக் கேள், யாழ்ப்பாணம் எண்டால் மேல போடு".

"சனத்தைக் கூட ஏத்துறது உன்ர கையிலதான் இருக்கு".

"ஆக்களிட்ட இறங்க முதல் காசை வாங்கு".

இக்கருத்துக்களை வெளியிட்டவர் முகமாலையிலிருந்து யாழ்ப்பாணம் சேவையில் ஈடுபட்டுள்ள ஒரு தனியார் பஸ் சாரதி. அவர் தனது சீடரான இளம் வயது கண்டக்டர் ஒருவருக்குத் தொழில் நுணுக்கங்கள் பற்றிச் சொல்லிக் கொடுத்த நுட்பங்கள் இவை. அவரும் தனது குருவின் ஆணையை "எள்ளென்றால் எண்ணெயாக" நின்று நிறைவேற்றிக் கொண்டிருந்தார்.

வெயில் அதிகம், வியர்வை வேறு, சாரதி இவ்வாறான கட்டளைகளைக் கொடுக்கும்போது, அந்த பஸ்ஸிற்குள் மக்கள் இருக்கிறார்கள் என்ற விடயத்தை அறவே மறந்துவிட்டார். மக்களும் ஏதோ போய்ச் சேர்ந்தால்போதும் என்ற மனநிலையில் இருந்தார்கள். முகமாலைக்கும் யாழ்ப்பாணத்துக்கு மிடையில் போதியளவு பஸ் வசதி உண்டு. அரச பஸ்கள் அளவில் பெரியவை. பிரயாணிகளுக்கும் நின்றவாறு பயணம் செய்வதுகூட இலகு. ஆனால், அவை பயணிகளின் தேவைகளைக் கருத்திற் கொண்டு, பிரயாணிகள் அதிகம் பிரயாணம் செய்யும் நேரங்களில் சேவையில் ஈடுபடுத்தப்படுவதில்லை. பிரயாணிகளைப் பொறுத்தவரை, பஸ்களின் நுகர்வோர் என்றே சொல்லவேண்டும். எந்தநேரத்தில் பிரயாணிகளின் தொகை அதிகரிக்கின்றது என்ற ஆய்வு செய்யப்படாதது... இல்லாவிட்டாலும், முகமாலையைத் தாண்டிவருவோரின் தொகை அதிகம் தான்.

பிரயாணிகள் தமது காசைக் கொடுத்து உடலாலும், உளத்தாலும் நொந்து போகின்றநிலை தனியார் பஸ்களில் மிகச் சாதாரணமாகக் காணப்படுகிறது. இது ஒரு பிரயாணம் மட்டுமேயென்று விட்டுவிடுவதற்கில்லை. இதில் ஒரு மனிதப் போக்கை நாம் கடைப்பிடிக்கத் தவறினால், இனிவரும் சந்ததி, பிரயாணம் என்பது இதுதான் என்று தமக்குள் முடிவெடுத்துவிட வாய்ப்புண்டு. அவர்கள் அதனைப் புரிந்துகொள்படாதது பிரதான குறைபாடாகும்.

யுத்தசூழல் ஒன்றிற்குள் நீண்டகாலம் வாழப்பழகிவிட்ட மக்களுக்கு "இது பரவாயில்லை" என்ற மனநிலையே எல்லா விடயங்களிலும் பிரதிபலிப்பதைக் காண முடிகிறது. முன்பிருந்த "கஷ்ட சீவியம்" இன்று ஓர் ஒப்பீட்டு அளவு கோலாகவே மாறிவிட்டது மற்றொரு மனிதத் துன்பம்.

இலங்கையில் இயல்புநிலை காணப்பட்ட காலங்களில் "யாழ் தேவி" புகையிரதம் இலங்கைப் புகையிரதத் திணைக்களத்திற்கு அதிக வருவாயை ஈட்டிக்கொடுத்தது யாவரும் அறிந்த ஒன்று. இன்றைய சூழலில் அந்தளவிற்குப் பிரயாணிகளின் தொகை வதற்கு அளவுகோலோ, ஒப்பீடோ அவசியமாகிறது. அதற்கான வாய்ப்பு வடபாகத்தில் தற்போதில்லை.

மக்களுடைய மனநிலைதான் அதற்கான காரணம். யாராவது ஒருவர் இந்த அநியாயத்திற்கு எதிராகக் குரல் கொடுத்தால், ஏனைய பயணிகளே "உனக்கு கஷ்ரமாக இருந்தால், இறங்கி விடு. நாங்கள் வீடு போய்ச்சேர என்று" பஸ் சாரதிகள் அல்லது நடத்துநருடன் ஒத்து ஊதுகின்ற நிலையே பெரும்பாலும் காணப்படுகின்றது. அல்லது "உப்பிடியெண்டால் நீ தனிக்காரில்தான் பிரயாணம் செய்யவேணும்" என்று ஒரு முடிவுரையும் வழங்கப்படும். இதில் "யதார்த்தவாதி - வெகு சன விரோதி" என்றநிலைக்கு அவர் தள்ளப்படுகின்றார். பெரும் பான்மை மக்களின் ஜனநாயகம் ஒரு சமூக உண்மையையே மறைத்துவிட துணைபோகின்றது.

ஒரு பிரயாணி கொஞ்சம் அசைந்தால் அதற்குள் இன்னொரு பிரயாணியை ஏற்றிவிடுகின்ற சாணக்கியம் ஒரு நடத்துநருக்கு உண்டு. அதையும் மீறி ஒரு பிரயாணி விவாதித்தால் - சாரதியினதும், நடத்துநரதும் துணைநிற்கும் பிரயாணிகளதும் சண்டித்தனம் அங்கு அரங்கேறும். இதன் அடிப்படைக் குறைபாடு - ஒரு சௌகரியமான பிரயாணத்தைப் பற்றி, ஒரு பிரயாணி புரிந்து கொள்ளாததன் விளைவே. முதலில் மக்கள் அதனைப் புரிந்துகொள்ள வேண்டும். ஒரு பஸ்ஸில் ஏற்கனவே உள்ள சனத்தின் அளவைப் பார்த்து விட்டே அதில் ஏறுவதா? இல்லையா? என்ற முடிவினை ஒரு பிரயாணி எடுக்கக் கற்றுக்கொள்ளவேண்டும்.

நடத்துநரின் அவசரம், அடுத்த ஒரு மைல் தூரத்திற்குள் சீற் தருவேன் என்ற உத்தரவாதம் போன்றவற்றை நம்பக்கூடாது. "வாசலில் நின்றால் பிரயாண ஒழுங்குசெய்ய பொலிஸார் பிடிப்பார்கள்" என்று ஒரு பிரயாணியை மேலே ஏற்றிவிட்டு அந்த இடத்தில் மேலும் இரு பிரயாணிகளை ஏற்றுவதற்கு மக்கள் அனுமதிக்கக்கூடாது.

மேலை நாடுகளில் ஆசனத்திற்கு மேல் மக்கள் பஸ்களில் ஏறுவதில்லை. அவ்வாறு ஏறினாற்கூட மற்றவருடன் உரசிக்கொண்டு பிரயாணம் செய்வதில்லை. பஸ்ஸின் கைபிடிகளில் மற்றவர்கள் பிடிப்பதால், அதிலிருந்து ஏதாவது தொற்றுக்கள் ஏற்பட்டுவிடும் என்ற பயத்தில் "சேவியற்" எனப்படும் ரிசு பேப்பர்களை அவற்றில்போட்டு, அதன் மேல் கை பிடித்துக்கொண்டு பிரயாணம் செய்வார்கள். அது சௌகரியமான பிரயாணத்தின் லட்சணம்.

**விஜயன்**

அந்தளவிற்குத் தேவையில்லையென்றாலும் - முதலில் தமது உரிமைக்காக மக்கள் மனம் மாற வேண்டும்.

# வெளிநாடு சென்ற இலங்கையரில் ஒரேயாண்டில் 156 பேர் விபத்தில்பலி!

இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்றவர்களுள் - 2001 ஆம் ஆண்டில் மட்டும் 158 இலங்கையர்கள் இறந்துள்ளனர். அவர்களுள் 156 பேர் விபத்துக்களில் சிக்கி இறந்துள்ளதாகத் தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் வைத்து ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், இவ்வாறு வெளிநாடுகளில் இறந்த இலங்கையரின் சடலங்கள் - இலங்கைக்கு மீண்டும் எடுத்துவரப்பட்டதாகவும் தெரிவித்தார்.

# மாவட்ட அபிவிருத்திக்கு நிதி இல்லை; ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் விசனம்!

(யாழ்பாணம்)

இவ்வருடம் யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளவேண்டிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு இன்னமும் நிதி ஒதுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. நேற்றுமுன்தினம் யாழ். செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இத்தகவல் வெளியிடப்பட்டது.

யாழ். மாவட்டத்தின் இவ்வருடத்திற்கான முதலாவது ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம், நேற்றுமுன்தினம் யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 1.30 மணிக்கு இந்தக்கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ரங்கராஜன் மற்றும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், அ.விநாயகமூர்த்தி, மாவை சேனாதிராஜா, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், என்.ரவிராஜ் மற்றும் மேலதிக அரச அதிபர் பத்தினியம்மா திலகநாயகம் போல் மற்றும் திணைக்களத் தலைவர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் கடந்த வருடம் நிதி ஒதுக்கீடுகள் எந்த வகையில் மேற்கொள்ளப்பட்டன என்பது பற்றியும் விரிவாக ஆராயப்பட்டதுடன், அரச திணைக்களங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும், திணைக்களத் தலைவர்களினால் விரிவாக எடுத்துக் கூறப்பட்டது.

இந்தவருடம் குடாநாட்டில் மேற்கொள்ளவேண்டிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு இன்னமும் வழங்கப்படாமையால், அபிவிருத்தித்திட்டங்கள் ஆரம்பிக்க முடியவில்லையெனத் திணைக்களத் தலைவர்கள் தெரிவித்தனர். (ச)

# மூவாயிரம் தொலைபேசி இணைப்புக்கள் யாழ்ப்பாணத்தில் ரெலிகொம் வழங்கும்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மேலும் மூவாயிரம் தொலைபேசி இணைப்புக்களை வழங்குவதற்கு ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த ஆண்டு இறுதிக்குள் மேற்படி மூவாயிரம் இணைப்புக்களையும் வழங்கமுடியும் என்று ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனப் பிரதிநிதி தெரிவித்தார்.

யாழ். செயலகத்தில் நேற்று நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் ஸ்ரீலங்கா ரெலிகொம் சார்பில் கலந்துகொண்ட பிரதிநிதியே மேற்படி தகவலை வெளியிட்டார்.

## நாய்களுக்குத் தடுப்பூசி

கொக்குவில் பகுதியிலுள்ள வளர்ப்பு நாய்களுக்கு - அப்பகுதிச் சனசமூக நிலையங்களில் வைத்துத் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இதன்படி - எதிர்வரும் 12 ஆம் திகதி காலை 10.45 தொடககம் 12 மணிவரை கொக்குவில் கிழக்கு மனோன்மணி சனசமூக நிலையத்திலும், 19 ஆம் திகதி முற்பகல் 9 மணி தொடக்கம் 10.30 மணிவரை நேதாஜி சனசமூக நிலையத்திலும் - 1 மணி தொடக்கம் 2.30 வரை வளர்மதி சனசமூக நிலையத்திலும் 20 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் 10.30 மணிவரை கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்திலும் 10.45 தொடக்கம் 12 மணிவரை வராகி அம்மன் கோவிலடி சனசமூக நிலையத்திலும் 1 மணி தொடக்கம் 2.30 வரை கலைமகள் சனசமூக நிலையத்திலும், 2.45 தொடக்கம் 3.45 வரை காந்திஜி சனசமூக நிலையத்திலும் வைத்துத் தடுப்பூசி போடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# பாடசாலைகளில் கட்டடங்கள் அமைக்க 92 மில்லியன் ரூபா

## வட — கிழக்கு மாகாண அமைச்சு ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பாடசாலைக் கட்டடங்களை அமைப்பதற்கென்று இந்த ஆண்டு 92 மில்லியன் ரூபாவை கல்வி பண்பாட்டலுவல்கள விளையாட்டுத் துறை அமைச்சு ஒதுக்கீடு செய்துள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத் தில் உள்ள 24 கல்வி வலயங்களைச் சேர்ந்த பாடசாலைகளுக்கு இந்த நிதி பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

பின்தங்கிய பாடசாலைகளுக்குக் கட்டடங்கள் அமைப்பதற்கு முன்னுரிமை வழங்கப்ப டும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## வள்ளங்கள் வழங்கப்பட்டன

யாழ். குடாநாட்டிலுள்ள 22 கடற்தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களிற்கு 13 லட்சம் ரூபா பெறுமதியான 15 வள்ளங்கள்,105 கட்டுமரங்கள் என்பனவற்றை யு.என்.டி.பி. கடனாக வழங்கியுள்ளது.

# சிறுபான்மையினர் உரிமைகள் பற்றி சிங்கள மக்களுக்கு விளக்கம்

## ஐரோப்பிய யூனியன் உதவ முன்வருகின்றது

(யாழ்ப்பாணம்)

சிறுபான்மை மக்களின் உரிமைகள் தொடர்பாகச் சிங்கள மக்கள் உட்பட அனைவருக்கும் விளக்கிக் கூறப்படவுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் இதற்குத் தேவையான உதவிகளை வழங்கவிருக்கின்றது. வடக்கு - கிழக்கு மாகாணம் உட்பட, நாட்டின் பல பாகங்களிலும் இதனை மேற்கொள்வதற்கு இலங்கை மனித உரிமை ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.

இதன் முதலாவது நிகழ்ச்சி திருகோணமலையில் நடைபெறும். இதற்கமையப் பல்வேறு கூட்டங்கள், கருத்தரங்குகள் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. நாட்டின் ஏனைய பகுதிகளிலும் சிறுபான்மை மக்களின் உரிமைகள் பற்றி விளக்கமளிக்கும் பல்வேறு நிகழ்வுகளை மனித உரிமை ஆணைக்குழு நடத்தவுள்ளது.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்து மத குருமார்களுக்கான கலந்துரையாடல் ஒன்று, இன்று மாலை 4 மணிக்கு ஆனைப்பந்தியில் உள்ள குருகுலத்தில் நடைபெறவுள்ளது. இக்கலந்துரையாடலில் பேராசிரியர் நாச்சியார் செல்வநாயகம் கலந்துகொண்டு சிறப்புரையாற்றவுள்ளார்.




# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003





## கென்யா உங்களுக்கு பாஸ் மார்க்ஸ்

இந்திய அணி சற்றுத் திணறித் தான்போனது. இலங்கை அணியின் அதிர்ச்சித் தோல்வியைவிட மிகமிகக் குறைந்த ஓட்டங்களில் கென்ய அணியிடம் மண்கௌவிப்போய்விடுமோ என்று இந்திய வீரர்களும், ரசிகர்களும், விமர்சகர்களும் கலங்கிநின்றது உண்மைதான்.... அடுத்தடுத்து மூன்று விக்கெட்டுக்கள் கென்ய வீரர்களின் அபூர்வ FEILDING ஆலும், BOWLING ஆலும் சரிந்தவுடன் நம்பிக்கைகள் தளர்ந்துபோனதும், ஷேவாக், சச்சின், முகமட் கைவ் ஆகியோரைத் திட்டித் தீர்த்ததும் உண்மைதான்....

டிராவிட், யுவராஜ் நின்று பிடித்தாலும், கடந்த சில போட்டிகளில் பொறுப்பற்றவிதத்தில் ஆடி, பலரின் விமர்சனங்களுக்கு ஆளாகிய கங்கூலி, அவசியமான நேரத்தில் இந்திய அணியை நடுத்தெருவில் கைவிட்டுச் செல்லும் தினேஷ் மொங்கியா ஆகியோர், பெரிதாக எதையும் வெட்டியா ஆளப்போகினம் என்று சலித்துக்கொண்டதும் உண்மைதான். அந்தளவிற்குக் கென்ய அணியினர் முழுத்திறமைகளை மைதானத்தில் காட்டியபடியேதான் இருந்தனர்.

இசகுபிசகாத, நேர்த்தியான பந்து வீச்சு, மிகமிக SHARP ஆகக் கவனித்து ஆடிய விக்கெட் கீப்பரின் பங்கு, பாய்ந்து, விழுந்து, புரண்டு பந்துகளைப் பிடித்தும், தடுத்தும், எடுத்தும் உரியவர்களிடம் கச்சிதமாக கொடுத்தும், வர்ணனையாளர்களின் வார்த்தை ஜாலங்களுக்குமெருகூட்டிய அந்த FIELDERS இன் வியக்கவைக்கும் திறமை, ரவிந்துஷாவின் எதிர்பாராத ரன் அவுட்வரையும் இந்திய அணியினரின் BOWLERS க்கு சிம்மசொப்பனமாக இருந்த, ஆரம்பத் துடுப்பாட்டக் காரர்களான ஓபுயா - ஷா ஆகியோரின் மிக நீண்ட நேர இணையாட்டம் (அப்போது RUN RATE 3 ஐத் தாண்டி விட்டாலும் கூட), அடுத்து வந்தவர்களின் திருப்திகரமான ஆட்டம் எல்லாமே கென்ய அணியின் எதிர்கால சாதனைகளை பிரதிபண்ணிக் காட்டியது.

எல்லாவற்றுக்கும் மேலாக கென்ய அணியின் BATTING STYLE என்பது அட்டகாசம்.


கங்கூலி - இன்று எப்படி?

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் மாத்திரம் 85 ரண்களைத் தாண்டும் வரையும், 5 பிடிகளைத் தவறவிட்ட இந்திய வீரர்களின் அசமந்தப் போக்கு, இதுவரை நடந்த போட்டிகளில் நன்றாய்செய்த இந்திய BOWLERS, கென்ய அணியிடம் எதிர்பார்த்த மாதிரி விக்கெட்டுக்களைச் சரிக்காமை - எல்லாவற்றுக்கும் காரணந்தான் என்ன? இருந்தும் RUN RATE கட்டுக்குள் இருந்தது நல்ல விடயம்.

225/6 என்ற நிலையையடைந்த (கே.ஒபுயா -79, ரவிந்து ஷா - 34) கென்யா அணியின் துடுப்பாட்டத் திறன் மெச்சத்தக்கதாக இருந்ததுடன் கென்யாவுக்கு TEST அந்தஸ்து கொடுப்பதில் தவறில்லை என்றும் எண்ணத்தோன்றியது அல்லவா?

225 இந்திய அணிக்கு VERY SIMPLE தான். ஆனாலும் அடுத்தடுத்து இழந்துவிட்ட 3 விக்கெட்டுக்களால் எல்லா வெற்றி நம்பிக்கைகளும் தவிடுபொடியாகியல்லவா இருந்தன. BOWLING PITCH என்றும், CAPE TOWN இந்திய அணிக்கு முன்னனுபவம் இல்லாத மைதானம் என்றும், இதுவரை இந்த மைதானத்தில் 19 போட்டிகளில் 15 இல் வெற்றியீட்டிய அணி FIRST BATTING எடுத்த அணியே என்றும் கூறினாலும் கூட, அன்றைய ஆட்டத்தில் இந்திய அணி சற்றுப் பின்னடைவான நிலையிலேயே இருந்தது.


இருந்தபோதும், அணித் தலைவர் கங்கூலியின் அன்றைய ஆட்டம் எல்லோரையும் பாராட்ட வைத்தது. இந்திய அணியின் வெற்றி நம்பிக்கையை வளர்க்க வைத்தது. இந்த WORLD CUP இல் தனது இரண்டாவது சதத்தைக் குவித்த கங்கூலி, MAN OF THE MATCH ஆனது பொருத்தமே. இக்கட்டான வேளையில் ஒரு அணித் தலைவரின் பொறுப்பான ஆட்டத்திற்கு கங்கூலி உதாரணமாகக் காட்டப்பட்டார்.

உபதலைவர் டிராவிட்டின் வழமையான, திறமையான ஆட்டமும், யுவராஜ் சிங்கின் GOOD PERFORMANCE உம் திருப்தியாக இருந்தாலும், இந்திய அணியின் அன்றைய வெற்றியில் 50% திருப்தியில்லை என்பதே உண்மை.

வி.ஏ.கோவி

## நேருக்கு நேர்


சச்சின் - பலத்த சவால்


சனத் - இன்று வருவாரா?

உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் ஒரு பரிதாபமான தோல்வியைச் சந்தித்திருந்த இலங்கை அணி, அவுஸ்திரேலிய அணியிடம் தலைவரில்லாத படையணிபோல படுதோல்வியைச் சந்தித்தது, மிகவும் கவலையாகத்தான் இருக்கின்றது. ஆனால், சில்வாவினுடைய அற்புதமான ஓட்டக்குவிப்பு, இலங்கை அணிக்கு தோல்வியில் கிடைத்த வெற்றி. அதேவேளை, அவருடைய சத இழப்பு அவருக்கு மட்டுமல்ல, இலங்கை ரசிகர்களுக்கும் இழப்புத்தான்.

**Super Six** ஆட்டத்தில் இலங்கை அணியினர் ஒருதரம் தங்களுடைய **Bowling Squad** ஐச் சீர்தூக்கிப் பார்க்கவேண்டிய ஒரு நிலைப்பாட்டில் உள்ளார்கள். அதேபோல் அவர்களோடு மோதப்போகின்ற இந்திய அணியும் கென்யாவிடம் மிகவும் கடினப்பட்டதைக் காணக்கூடியதாக இருந்தது. இன்று இந்திய - இலங்கை அணிகளுக்கிடையே நடைபெறுகின்ற போட்டி **The Wanderers, Johannesburg** மைதானத்தில், **G.M.T.** நேரப்படி **8.00 a.m.** இற்கு நடைபெறுகின்றது. இந்தப் போட்டிக்கு, நடுவராக **CH.Lioyd** உம் மத்தியஸ்தர்களாக **SJA.Taufel, DR. Shepherd, D.J.Harper(TV), P.Willey(4th)** ஆகியோரும் கடமையாற்றுகிறார்கள்.

இந்திய அணியைப் பொறுத்தவரை, தலைவர் கங்கூலி ஒரு திடீர் எழுச்சியை கென்யாவுடனான போட்டியில் காட்டியிருக்கிறார். இது இந்திய ரசிகர்களுக்கு ஒரு குளிர்ச்சி. ஆனால், இந்திய வீரர்களின் பந்துகளுக்கு நான்கும், ஆறும் எடுத்துப் பழக்கப்பட்ட **Master Blaster** சனத் ஜயசூரியவின் கைகள் இன்று சும்மா இருக்குமா?

ஆனால், அவுஸ்திரேலிய அணியினால் காயம் அடைந்த சனத்தினால் இன்று திறமையாக ஆடமுடியுமா? அவுஸ்திரேலிய வீரர்களின் பந்துகளையே தொலைத்துக்கட்டிய அரவிந்த டீ சில்வா - இன்று சிறிநாத், ஷாகிர் கான், நெஹ்ரா ஆகியோருடைய பந்துகளையும் சாத்துவார் என்பதனை அவருடைய **Batting form** காட்டுகின்றது. இலங்கை அணி வீரர்களுடைய **Batting Order** இல் மஹேல ஜெயவர்த்தனவுடைய இடத்தினை, சங்கக்காரவுக்குக் கொடுத்தால் என்ன என்று ஆராயுமளவுக்கு மஹேலவுடைய ஆட்டம் இருக்கின்றது. **Mahela, Please Get Out.**

இலங்கை - இந்திய அணிகளுக்கிடையிலான ஆட்டங்கள் மிகவும் பரபரப்புக்குரியதாகவும், ஒரு ரசனைக்குரியதாகவும் இருந்ததை எப்போதும் காணலாம்.

ஆனால், இன்று நடைபெறுகின்ற போட்டியில் இலங்கை அணித்தலைவர் சனத் ஆடாமல்விட்டால், அவருக்காக அவிஸ்க குணவர்த்தன அணிக்கு அழைக்கப்படலாம் என BCCSL வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அதேபோல இந்திய அணியிலும் இன்று கும்ளே இடம்பெறமாட்டார் என்று தெரிகின்றது.

எது எப்படி இருப்பினும் இன்று ஆசிய நாடுகளின் ஒரு திருவிழா ரசிகர்களுக்கு நிச்சயந்தான். **Sanath Are You Ok?**

P.N. சுதர்சன்

## KIWIS - டைபூ இருவருக்கும் வெற்றி

ஜிதேந்ரா


பிளெமிங், அஸ்ரல் - வெற்றித்தூண்கள்

சுப்பர்சிக்ஸ் ஆட்டங்களில் மூன்றாவது ஆட்டம் முடிவடைந்துவிட்டது. சமதையாக சிம்பாப்வே போராடும் என்று எதிர்பார்த்தது வீண்போகவில்லை.

நியுசிலாந்து வெற்றியைக் கண்டாலும், இலகுவானதொரு வெற்றிக்கனியை தட்டிச்செல்ல சிம்பாப்வே விடவில்லை. ஆரம்பத்தில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்த சிம்பாப்வே, சராசரியாகத துடுப்பெடுத்தாடத்தான் முடிந்தது. இதற்குக் காரணமாக அமைந்திருந்தது - ஷேன் பொண்ட், ஓரம் ஆகியோரின் துல்லியமான பந்துவீச்சுத்தான். இருவரும் 20 ஓவர்களில் கொடுத்த ஓட்டங்கள் வெறும் 65 தான்.

இந்தவகையில் சின்னப்பையன் டைபூ வரும்வரையும் மந்தகதிதான். ஆனால், டைபூ வந்ததும் களத்தில் நின்றவர்கள் மூத்தவர்கள் என்றும் பாராமல், புயல் வேகத்தில், மூன்று பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் என்று சாத்தி 53 ரன்களை குவித்துவிட்டான். டைபூ ஆட்டமிழந்து சென்ற பின்னர், இன்னொரு பூகம்பம் இருப்பது பிளெமிங்குக்குத் தெரிந்திருக்கவில்லை. அந்தப் புயல் அணித்தலைவர் ஸ்ரீக் என்ற பெயரில், எர்வின் என்பவரையும் துணைசேர்த்துக்கொண்டது. 176/6 என்றிருந்தபோது, மீதமிருந்ததும் ஐந்து ஓவர் மட்டுந்தான். ஆனால், கண்மூடிக்கண் திறப்பதற்குள், ஹீத் ஸ்ரீக் 72, ஏர்வின் 31, இருவரும் ஆட்டமிழக்காமல் கௌரவமான ஓட்ட எண்ணிக்கை 252/7 என்றவாறாகியது.


டைபூ - அணியில் நிரந்தரம்

என்றாலும்கூட நியூசிலாந்து அணி சிறிது அழுத்தத்திற்கு உட்பட்டாலும், விரைவிலேயே தன்னைச் சுதாகரித்துக்கொண்டது. நிதானமாகவே இலக்கை நோக்கி நிச்சயத்துடன் முன்னேறியது. நாதன் அஸ்ரல் அச்சாணியாக மாறியபின் முடிவு தெளிவாகத் தெரிந்தது. அவருக்கு நல்லதொரு துணையாக பிளெமிங் நின்று உதவ, அவர் போனபின், மூன்றாம் விக்கெட் இழப்பின் பின் வந்த கிறிஸ் கெயின்ஸ், அஸ்ரலுடன் இணைந்து கொண்டபோது, இந்த 'இருவர் இணையை' உடைத்துவிட சிம்பாப்வே வீரர்களால் இயலவில்லை. அஸ்ரல் குவித்த சதம், கிறிஸ் கெயின்ஸ் குவித்த அரைச்சதம் ஆகியன அருமை. பெறுமதியான வெற்றியும் கூட. அஸ்ரல் ஆட்டநாயகன். அதேவேளை டைபூ ரசிகர் மனதின் நாயகன்.


கென்ய - இந்திய சுப்பர் சிக்ஸ் ஆட்டத்திலிருந்து

## நாளும் ஒரு வினா

உலகக்கிண்ணப் போட்டிகளில் ஒரு ஓவரில் எடுக்கப்பட்ட அதிகூடிய சராசரி ஓட்ட எண்ணிக்கை யாது?

மேற்கிந்தியத்தீவுகள் 10.3 எதிர் கனடா

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்

எமது தன்னியக்க இயந்திரம் மூலம் (ATM) உங்கள் நடைமுறைக் கணக்கு, சேமிப்புக் கணக்குகளை 24 மணிநேரமும் செயற்படுத்த முடியும்.



நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003
SUPER SIX மூன்றாம் நாள்
இந்தியா Vs இலங்கை - THE WANDERERS - JOHANNESBURG - 2 pm.

# தப்பி ஓடிய படையினரை சேவையிலிருந்து நீக்கும் இராணுவத்தின் முடிவுக்கு கடற்படை, வான்படை அதிருப்தி

(கொழும்பு)

இராணுவத்தில் இருந்து தப்பி ஓடியோரை - இராணுவ சேவையில் இருந்து விடுவிக்கும் இராணுவத்தின் முடிவுக்கு கடற்படை மற்றும் விமானப்படை என்பன அதிருப்தி வெளியிட்டுள்ளதுடன், இது பொருத்தமற்றதொரு நடவடிக்கை என்றும் கூறியுள்ளன.

தப்பயோடிய படையினரை ராணுவ சேவையில் இருந்து நீக்கியவர்களாக அறிவிக்கும் முடிவு குறித்து இறுதி முடிவு எடுப்பதற்கு முன்னர், இது தொடர்பான கருத்துக்களை தெரிவக்கும்படி பாதுகாப்பு அமைச்சினால் கடற்படைக்கும், விமானப்படைக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், இதுவரை கடற்படையோ, விமானப்படையோ இது தொடர்பான கருத்துக்களை பாதுகாப்பு அமைச்சுக்கு வழங்கவில்லை. எனினும், விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் டொனால்ட் பெரேரா இதுகுறித்து அதிருப்தி கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

உயர்கல்வித் தகைமையுடையவர்களைத்தான் தாங்கள் ஆட்சேர்ப்புச் செய்வதாகவும், பெரும் செலவில் இவர்களுக்குப் பயிற்சிகளை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வழங்குவதாகவும், இதனால் சாதாரணமாக அவர்கள் விட்டு விலகிச்செல்வதை அனுமதிக்க முடியாது என்றும் விமானப்படைத் தளபதி கருத்துத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் விமானப்படையிலிருந்து தப்பி ஓடுவோர்மீது, விமானப் படையின் சட்டதிட்டங்களுக்கு அமைவாகவே நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் விமானப்படைத் தளபதி தெரிவித்திருக்கிறார்.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரியும், இதே கருத்தையே வெளியிட்டியிருப்பதுடன், கடற்படையிலிருந்து தப்பியோடியோருக்கு எதிராக கடற்படைச் சட்டங்களுக்கு அமைவாகவே நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இராணுவத்தைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் தசநாயக்க-

புதியதிட்டம் மூலம் படையில் இருந்து தப்பியோடுவோரின் பிரச்சினையைத் தணித்து, ஒரு ஒழுங்கமைப்பை ஏற்படுத்த முடியுமென்று இராணுவம் கருதுவதாகத் தெரிவித்துள்ளார்.

# பலசாலிகளாக இருப்பவர்களுக்கே பேச்சுக்களில் ஈடுபடும் தகுதியுண்டு

## புளொட் தலைவர் சித்தார்த்தன் கூறுகிறார்

பலசாலியாக இருப்பவர்களே சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபடத் தகுதிபெற்றவர்கள். அவ்வகையிலேயே விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளனர். அதேவேளை, நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட எமது கட்சி முற்றுமுழுதான ஆதரவை வழங்கும் என்று புளொட் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியா தெற்கு, இலுப்பைக் குளத்தில் நடைபெற்ற சனசமூக நிலையத் திறப்புவிழாவில் கலந்து கொண்டு பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுவார்த்தைகளைக் குழப்ப, தென்னிலங்கையில் பல முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

புளொட் எப்போதும் சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதோடு, எந்தச் சந்தர்ப்பத்திலும் சமாதானத்தைக் குழப்பப்போவதில்லை என்றும் அவர் மேலும் கூறினார்.

# 'மாமனிதர்' குமார் பொன்னம்பலம் அஞ்சலிக் கூட்டம் நெல்லியடியில்

'மாமனிதர்' குமார் பொன்னம்பலத்தின் 3 ஆம் வருட நினைவஞ்சலிக் கூட்டமும், திருவுருவப்பட ஊர்திப் பவனியும் நேற்று வடமராட்சியில் இடம் பெற்றது. இந்நிகழ்வுகளில் பாடசாலை மாணவர்கள், மதப் பெரியார்கள் உட்பட, பல நூற்றுக்கணக்கான மக்கள் பங்கேற்றனர்.

மாலை 4 மணிக்கு பருத்தித்துறையிலிருந்து புறப்பட்ட மாமனிதரின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி, மாலுசந்தி பிள்ளையார் கோயிலுக்கு எடுத்துவரப்பட்டது. அங்கிருந்து ஊர்வலமாகப் புறப்பட்ட ஊர்தி மாலுசந்தியை அடைந்து தொடர்ந்து வதிரிச் சந்தியை வந்தடைந்தது. வதிரிச் சந்தியில் அமைந்துள்ள அரசியற்துறை அலுவலகத்தில், மாமனிதருக்கு விடுதலைப்புலிகளின் ஆண், பெண் போராளிகளால் மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர் நெல்லியடி சந்தியை அடைந்து அஞ்சலிக்கூட்டம் நடைபெற்ற மண்டபத்துக்கு மாலை 5.30 மணிக்கு வந்தடைந்தது.

தொடர்ந்து மாமனிதரின் நினைவஞ்சலிக்கூட்டம் சட்டத்தரணி இ.உருத்திரா தலைமையில் ஆரம்பமாகியது. இந்நிகழ்வில் மதகுருக்களான சிவஸ்ரீ சோ.தண்டாயுதபாணி தேசிகர், வணபிதா அன்ரனிதாஸ் ஆகியோரும் வடமராட்சி விடுதலைப் புலிகளின் அரசியற்துறை பொறுப்பாளர் தயா, தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினர்கள் குமரகுருபரன், அ.விநாயகமூர்த்தி, சி.வி.கே.சிவஞானம், ஆர்.ஈ.ஆனந்தராசா மற்றும் பாடசாலை அதிபர்களும் கலந்து கொண்டதுடன் அஞ்சலி உரைகளையும் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி,

விடுதலைப் புலிகள்தான் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்பதை தமிழ்க் காங்கிரஸ் ஏற்றுக் கொண்டிருக்கிறது. புலிகளின் தலைவர் வே.பிரபாகரன்தான் எமது தேசியத் தலைவர் என்று தீர்மானித்திருக்கிறோம்.

விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்படுவதன் மூலமே தமிழ்மக்களின் அபிலாஷைகளை எட்டமுடியும் என்று தெரிவித்தார்.

# போர் நிறுத்த ஒப்பந்தத்தை அரசாங்கம் முழுமையாக அமுல்நடத்த வேண்டும்

## ரெலோ மத்திய குழுவில் தீர்மானம்

(மட்டக்களப்பு)

போர்நிறுத்த ஒப்பந்தம் ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்துள்ள போதிலும், காலக்கெடு விதிக்கப்பட்ட பல விடயங்கள் நிறைவேற்றப்படாமல் உள்ளன. எனவே, போர்நிறுத்த ஒப்பந்தத்தை முழுமையாக அமுல்படுத்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு ரெலோவின் மத்திய குழு மற்றும் செயற்குழுவின் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு ரெலோ அலுவலகத்தில் ரெலோ முதல்வரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மேலும், உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் அகதிகளின் மீள் குடியேற்றம் தாமதப்படுத்தப்படுவதுடன், பொதுக் கட்டடங்களில் இருந்து படையினர் இன்னும் வெளியேறவில்லை என்றும்,

வடக்கு - கிழக்கில் மூடப்பட்ட வீதிகள் இன்னும் திறக்கப்படவிலலை என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

# புலிகளுடன் என்னென்ன பேசுவது; முஸ்லிம் எம்.பிக்கள் நாளை ஆராய்வு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் என்னென்ன விடயங்களைப் பேச வேண்டும் என்பது குறித்து ஆராய்வதற்காக, முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாளை சந்தித்துப் பேசவுள்ளனர்.

நாடாளுமன்றக் கட்டடத்தில் நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பில், பதினைந்து முஸ்லிம் நாடாளுமன்ற உறுபினர்கள் கலந்துகொள்வர் எனத் தெரியவருகின்றது.

வன்னியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்துவதற்கு, முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முயற்சிசெய்து வருகின்றனர். இந்தச் சந்திப்பிலே என்னென்ன விடயங்கள் கலந்துரையாடப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிக்கவே நாளை கூட்டம் நடத்தப்படவுள்ளது.

## இணையத் தொடர்பு செயலிழப்பு

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா ரெலிகொம்மின் ஊடான இணையத்தொடர்புகள், நேற்று அதிகாலை முதல் பிற்பகல் வரை நாடுமுழுவதும் செயலிழந்தன.

இதனால் இணையத் தொடர்பு வசதிகளை நம்பியிருந்த தொலைபேசித் தொடர்புகள், வங்கிச்சேவைகள் என்பன பாதிக்கப்பட்டன. நேற்றுமாலை முதல் இணையத் தொடர்புகள் மீளவும் ஏற்படுத்தப்பட்டன.

வெளிமாவட்ட மாணவர்களுக்கான
அதிதுரித மீட்டல்
விக்னா
கல்வி நிறுவனம்

## கச்சதீவு...

கச்சதீவை அடைந்தார். படகைக் கரையில் இருந்து 200 மீற்றர் தூரத்தில் விட்டுவிட்டு நீந்திக் கரைக்குச் சென்றபோதே, கற்பாறையில் அகப்பட்டு இவர் இறந்துள்ளார். இவருடன் சென்ற மற்ற இருவரும் இறந்த நபரைக் காணவில்லை எனத் தேடிய போதே, கரையில் மிதந்த சடலத்தைக் கண்டெடுத்தனர்.

விசாரணைகளை மேற்கொண்ட ஊர்காவற்துறைப் பொலிஸார், யாழ். போதனா வைத்தியசாலையில் வைத்து நேற்று மாலை சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைத்தனர். (ரா)

## அமெரிக்க...

தாக்குதல்களில் இருந்து பாதுகாப்புத் தேடிக்கொள்வதற்கான முகமூடிகளை அணிந்து, தொடர்ந்தும் பயிற்சிகள் தூதரக ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வருவதாகவும் அமெரிக்க தூதரக பாதுகாப்பு அதிகாரி புறூஸ் ஏ.லோகோவ் தெரிவித்துள்ளார்.

## அக்குரஸ்ஸ...

ரத்து 381 வாக்குகளும் கிடைத்துள்ளன.

அக்குரஸ்ஸ இடைத்தேர்தல் சில சம்பவங்களைத் தவிர சுதந்திரமாகவும் நீதியாகவும் இடம்பெற்றதாக, தேர்தலைக் கண்காணித்த பவ்ரல் மற்றும் சி.எம்.ஈ.வி. ஆகிய அமைப்புக்கள் தெரிவித்தன. தேர்தல் தினத்தன்று பாதுகாப்புக்கென 700 பொலிஸார் பணிக்கு அமர்த்தப்பட்டிருந்தனர்.

## யாழ்.புத்திஜீவிகளுடன்...

மண்டபம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளது.

அதேவேளை, அமெரிக்க அரசு யாழ். மாவட்டத்தில் இதுபோன்ற பல்வேறு முதலீடுகளை மேற்கொள்வதற்கு திட்டமிட்டுள்ளது.

இதேவேளை, நாளை செவ்வாய்க்கிழமை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் தலைமையிலான குழுவொன்று உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வரவுள்ளது. இக்குழுவினர் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் இரு முக்கிய கூட்டங்களில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இக்குழுவினரின் யாழ். விஜயத்துக்கான முன்னேற்பாடுகளைக் கவனிப்பதற்காக, நேற்று முன்தினம் அமெரிக்கத் தூதரகத்தைச் சேர்ந்த இரு அதிகாரிகள் யாழ்ப்பாணம் விஜயம் செய்திருந்தனர். (க)

# முஸ்லிம் குழுக்களிடையே புத்தளத்தில் மோதல்!

## இளைஞர் ஒருவர் சுட்டுக்கொலை

(புத்தளம்)

புத்தளம் நகரப் பகுதியில் நேற்றிரவு இரண்டு முஸ்லிம் குழுக்களிடையே ஏற்பட்ட கலவரத்தில் முஸ்லிம் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார்.

நேற்றிரவு 7 மணியளவில் முஸ்லிம் குழுக்களிடையே ஏற்பட்ட மோதலில், றியாஸ் என்ற இளைஞர் சுட்டுக்கொல்லப்பட்டார். அத்துடன் ஐந்து கடைகளும், இரண்டு வீடுகளும் தீவைத்து எரிக்கப்பட்டன. இருவர் படுகாயமடைந்தனர்.

இச்செய்தி அச்சுக்குப்போகும் வரை - ஆங்காங்கே வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுக் கொண்டிருப்பதாகவும், புத்தளத்தில் பதற்றம் நிலவுவதாகவும் தெரியவருகின்றது. சில இடங்களில் துப்பாக்கிச்சூடுகள் நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கலவரத்தை, கலகம் அடக்கும் பொலிஸாரின் துணையுடன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

## கொழும்பில்...

புரை வழங்கி அவர்களைக் கடமையில் ஈடுபடுத்தி, பாதுகாப்பை மேற்கொள்ளுமாறும் கொழும்பிலும் மற்றும் பிற இடங்களிலும் தமிழர் வாழும் இடங்களில் ரோந்து நடவடிக்கையில் படையினரை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்குமாறும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை - இந்திய...

அங்கு நடைபெற்ற பிரார்த்தனையில், இந்திய - இலங்கை யாத்திரிகர்கள் இணைந்து பக்திபூர்வமாகப் பங்குபற்றினர்.

ஆலயச் சுற்றாடல் பகுதியில் அசம்பாவிதங்களைத் தவிர்ப்பதற்காக பொலிஸாரும், கடற்படையினரும் அங்கு அலுவலகம் அமைத்து கடமையில் ஈடுபட்டனர்.

மன்னாரிலிருந்து இம்முறை குறைந்த எண்ணிக்கையான பக்தர்களே அங்கு வருகை தந்திருந்தனர். அதேபோல், இந்தியாவிலிருந்தும் வழமையைவிடக் குறைந்த எண்ணிக்கையான யாத்திரிகர்களே வருகை தந்திருந்தனர். (113,120)

## அமைதி முயற்சிகள்...

படைத்தரப்பினர் பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

இருபது வருடகாலப் போருக்கு உடனடியாகத் தீர்வு காணமுடியாது. யுத்த நிறுத்தம் முறிவடைந்துவிடும் என்று சிலர் கூறுகின்றனர். ஆனாலும் அரசாங்கம் உடனடியாக யுத்தத்துக்குச் செல்லாது.

ஆனாலும் - படையினர் எந்த நேரமும் நாட்டைக்காக்கத் தயாராகவே இருக்கவேண்டும். புலிகளுடன் பிரச்சினைகளைப் பேசித்தீர்ப்பதில் அரசாங்கம் உறுதியாக இருக்கின்றது.

சமாதான முயற்சிகள் குறித்து படையினருக்கு விளக்க வேண்டியது அவசியமாகுமென்று தெரிவித்தார்.

நேற்றைய சந்திப்பில் - வன்னிப் பிராந்தியத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால உட்பட, ஆயுதப் படைகளைச் சேர்ந்த முக்கிய அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 10.03.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.